For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

விலை : ரூ 60 | திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் | செப்டம்பர் 2022 | இதழ் 28

# MISSIONS

## அன்றைய சுவிசேஷப் பணியிலிருந்து இன்றைக்கான பாடங்கள்..

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

# ஆசிரியர் சுவடு

**கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களே,**

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் திருநெல்வேலி வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இம்மாத இதழானது **“அன்றைய சுவிசேஷப் பணியிலிருந்து இன்றைக்கான பாடங்கள்”** என்ற ஆய்வு கட்டுரைகளை சுமந்து வருகின்றது. செப்டம்பர் மாதம் ஆசிரியர்களுக்கு ஒரு சிறப்பான மாதமாகும் மிஷனெரிகளாயும் ஆசிரியர்களாயும் பணியாற்றியவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். நம் திருச்சபைகளின் வரலாற்றை திருப்பிப்பார்கும் போது அவர்களின் ஆசிரியப்பணியும், ஊழியமுமே இன்று நம் ஆசீர்வாத வாழ்வின் அஸ்திபாரங்களாக இருக்கின்றது.

நான் ஏன் சுவிசேஷ ஊழியஞ்செய்யவேண்டும்? அது எனக்கு கொடுக்கப்பட்ட கட்டளை, அது எனக்குக்கிடைத்த பாக்கியம், சிலாக்கியம் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறது சபைக்குள்ளும் பலன் தருகிறது கொலோ. 1:6. கொடுப்போருக்கும் கொள்வோருக்கும் பலனளிக்கிறது. நம் நாட்டுக்கும் சுவிசேஷம் வராதிருந்தால் நம் நிலைமை என்ன? நம் தேசம் இன்று எப்படியிருக்கும்? வந்த நன்மையெல்லாம், சுவிசேஷத்தின் மூலமாயே. மூப்பர்களே, ஊழியரே, தலைவர்களே, ஆசிரியரே, திறமையுள்ள வாலிபரே. நல்வரம் பெற்ற நண்பர்களே, நாம் எழும்பி, கிறிஸ்துவாகிய ஒளியை மற்றவர்களும் பெற்றுக்கொள்ள உழைப்போம்.

வரும் நாட்களில் இன்னும் சிறந்த ஆய்வுகளுடன் வரலாற்றுச் இதழ் கொண்டு வர முயன்று வருகின்றோம். உங்கள் பகுதிகளில் பணியாற்றிய மிஷனெரிகள், இந்திய ஊழியர்கள், குருமார்கள், மறந்த, மறைந்த மறக்கப்பட்ட வரலாற்றுச் செய்திகளை எழுதி அனுப்புங்கள். விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு மாதமும் கொடுக்கப்படும் தலைப்பின் கீழ் எழுதி அனுப்ப அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இதழினை வெளிக்கொண்டுவருவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். நன்கொடைகளை அனுப்ப இதழின் பக்கங்களிலிருக்கும் வங்கிக் கணக்குகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நண்பர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களை சந்தாதாரர்களாக்குங்கள். தொடர்ந்து வரலாற்று ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வரும் அக்டோபர் மாத தலைப்பாக **“புதிய சபைகளுக்கான தலைவர்களை உருவாக்குவதில் வரலாற்று மாதிரிகள்”** என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரைகளை எழுதி அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*manna selvakumar*
கிறிஸ்துவின் பணியில்


சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்
9176780001


**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

Bank :- Federal Bank
Name :- Tinnevelly Christian Historical Society
Account number :- 1748 020000 3684
IFSC Code :- FDRL0001748

“கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்” மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும் காசோலை மற்றும் வரைவோலை செலுத்த ‘திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’ ( Tinnevelly Christian Historical Society ) என்ற பெயரில் எடுக்கவும்


**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in/
tchsportal.co.in
christianhistorical@gmail.com



# பர்த்தலோமேயு சீகன்பால்க்

**Rev. Dr.S.D. Ponraj**
Author & Publisher
Mission Educational Books.

## "அன்றைய சுவிசேஷப் பணியிலிருந்து இன்றைக்கான பாடங்கள்"

**சமயத்தைப் பரப்புதலிலும், மனித நேயத்திலிருந்தும் சுவிஷேப் பணிகளை எப்படி மேற்கொண்டார்கள் என்ற தகவல்களை வரலாற்றுப் பக்கங்களில் இருந்து.**

### சீகன்பால்க்கின் மிஷனரிப் பணித் திட்டங்கள்

பேராயர் ஸ்டீபன் நீல் **"கிறிஸ்தவ மிஷன் வரலாறு"** என்ற தனது ஆங்கில நூலில், கீழ்காணும் ஐந்து கொள்கைகளை சீகன்பால்க்கின் மிஷனரி அருட்பணியில் காணமுடிகிறது என்று கூறுகிறார்.

- **திருச்சபையும் பள்ளிக்கூடமும் இணைந்து செயல்பட வேண்டும்.**

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் அனைவரும் தேவனுடைய வார்த்தையை (திருமறை) வாசிக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். இதற்கென அனைத்து கிறிஸ்தவரும் (திருச்சபை) ஆரம்ப கல்வியாவது பயில வேண்டும். இந்நோக்கோடு பள்ளிக்கூடமும் அனாதைகள் காப்பகமும் சீகன்பால்க்கால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த முயற்சி முன்னோடி நடவடிக்கையாயிருந்தும் வெற்றியாய் அமைந்தது. கிறிஸ்தவ இளைஞர்களுக்குத் தேவையான பயிற்சித் தந்து திருச்சபையின் பணியிலும், அரசு நிர்வாகத்திலும் பல வேலை வாய்ப்புகள் கிடைக்கச் செய்தார்.

- **கிறிஸ்தவர்கள் அனைவரும் திருமறையை வாசிக்க வேண்டுமென்றால் அது அவர்கள் தாய்மொழியில் கொடுக்கபட வேண்டும்.**

தொலைதூர பார்வையுடன் புது ஏற்பாட்டை தமிழாக்கம் செய்து, 1718-ம் ஆண்டு அதை அச்சிட்டு வெளியிட்டார். பழைய ஏற்பாட்டிலும் பகுதிவரை மொழியாக்கம் செய்தார். மிஷனரி அருட்பணிக்கு திருமறை மொழியாக்கப் பணி அடிப்படையானதென்று உண்மையை பிற்காலத்தில் வில்லியம் கேரியும், ஹென்றி மார்டினும் உணர்ந்து செயல்பட, சீர்திருத்த திருச்சபையின் முதல் மிஷனரியான சீகன்பால்க் அஸ்திபாரம் போட்டார் என்றால் மிகையாகாது.

- **மக்களின் மனநிலை குறித்து முழுமையான தகவல்களின் அடிப்படையில் தான் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்.**

இந்த கொள்கை மக்களின் நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் நன்கு ஆராய்ந்து படிக்க அடிகோலிட்டது. இந்து சமயத்தை அவர் ஆழ்ந்து படித்ததின் விளைவாக **'மலபார் தேவர்களின் வம்ச வரலாறு'** 1867 என்ற நூலை எழுதினார். இந்துகளின் சமயச் சடங்குகளுக்குக் குறித்து இந்து பூசாரிகளோடு உரையாடி இந்து மதத்தைக் குறித்து செய்திகளை நுட்பமாக அறிந்து கொண்டார். அவரது மிஷனரிக் கொள்கைகளை அன்றைய மிஷன் நிர்வாகக் குழு ஏற்று மெச்சாவிடினும் இன்று இதே மிஷனரிக் கொள்கைகள் அனைவராலும் ஏற்று போற்றுதற்குரியதாய் அமைந்துள்ளது.

- **தனி மனிதன் மனமாற்றமடைந்து இரட்சிக்கப்பட வேண்டும் என்பது அவரது குறிக்கோளாக அமைந்தது.**

கும்பலாக அல்லது குழுவாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சி சீகன்பால்க் காலத்தில் இல்லை. எனினும் சீகன்பால்க் செய்த பணியினால் பயன்பெற்றோர் வேறு எண்ணங்களோடு கிறிஸ்துவத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்தது பிரச்சனையாயிருந்தது. அவர் செய்த

சமுதாயப் பணியின் காரணமாக மக்கள் பெயரளவில் கிறிஸ்தவர்களாக மாறாதபடிக்கு கவனித்துக்கொண்டார். கிறிஸ்தவர்களாய் மாற விரும்புவோருக்கு நியமனங்கள் வைத்தார். எனவே உண்மை மனமாற்றம் கொண்டோரே கிறிஸ்தவராயினர்.

- **இந்திய அருட்பணியாளரைக் கொண்ட இந்திய திருச்சபை, கூடிய விரைவில் உருவாக வேண்டும்.**

இந்த கொள்கையைப் பின்பற்றி திருச்சபை இந்தியமயமாக்கபட முன்னோடியாக இருந்தார். இந்த கண்ணோட்டதுடன் ஸ்தல மக்களை போதக அருட்பணிக்கும் ஆசிரியர் பணிக்கும் பயிற்றுவிக்க பயிற்சி நிறுவனங்களை நிறுவினார். மிஷன் ஆரம்பித்து மூன்றே ஆண்டுகளில் ஸ்தல பணியாளர்களை போதகராய் அபிஷேகம்பண்ண அதிகாரம் தர வேண்டும் என்று மிஷன் நிர்வாக குழுவிற்கு பரிந்துரை செய்தார். இந்த நுண்ணறிவை பின்னர் வந்த மிஷனரிகள் பின்பற்றி இந்திய மயமாக்கப்பட்ட திருச்சபையை நிலைநாட்டினர்.

### II சமய கலாச்சாரத்தை குறித்த கூர் உணர்ச்சித் திறன்.

- **சீகன்பல்க்கிற்கிருந்த கூர் உணர்ச்சித் திறன் மக்களின் மொழியைக் கற்க வைத்தது.**

சீகன்பால்க்கின் கைவசம் கிடைத்த ரோமன் கத்தோலிக்க மிஷனரியின் தமிழ் இலக்கண பழையதோர் புத்தகம் தமிழ் இலக்கணத்தின் விதிகளை அறிந்திட உதவியது. சாதாரண நடைமுறை மொழியைக் கற்று கொள்வதோடு திருப்தியடையாமல், சாஸ்திரிய தமிழையும், செய்யுளையும் மற்றும் தூய தமிழையும் கற்றார். அவர் கற்ற தமிழ் மொழி நற்செய்தியை தீர்க்கமாக பிரசங்கிக்கவும் நன்முறையில் திருமறையை தமிழாக்கம் செய்யவும் உதவியது. அவர் மக்கள் பேசிய மொழியை பேசியபடியால் அவர் தெருக்களில் தோன்றினாலும், வயல் வெளிகளில் இருந்தாலும் நூற்றுக்கணக்கானோர் அவரை சூழ்ந்து கொண்டு அவருக்கு மரியாதையை அளித்து அன்பை பகிர்ந்து கொண்டனர். பலதரப்பட்ட தமிழ் இலக்கியங்களை அவர் சேகரித்து மக்களின் கலாச்சாரத்தையும் பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்தார்.

- **சீகன்பால்க்கிற்கு இருந்த கூர் உணர்ச்சி திறன், மக்களின் குறிப்பாக இந்து மக்களின் நம்பிக்கையும் சடங்கச்சாரங்களையும் அறியும்படி செய்தது.**

இந்தியாவை அவர் அடைந்ததும் தன்அருட்பணி நற்பலனளிக்க மக்களைக் குறித்து நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தார். இந்திய மக்களைக் குறித்த அறிவு, அவர்களுடைய ஆன்மீக அனுபவங்கள், பாரம்பரியங்கள், வேதங்கள், மெய்ஞானம், விஞ்ஞானம் முதலியவற்றை அவர்கள் எழுதிய வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ள பெரிதும் முயன்றார். இதைச் சரிவரச் செய்யும்படி பிரதிபடுத்தும் பெருமக்களோடு நேரடியாகவும் கடித மூலமும் தொடர்புகொண்டு கற்று அறிந்து கொண்டார்.

- **சீகன்பால்க்கிற்கிருந்த கூர் உணர்ச்சி திறன், பல ஸ்தல கலாச்சார வழக்கங்களை எடுத்து கிறிஸ்தவத்திற்கேற்ப மாற்றங்களை செய்ய உதவியது.**

சீகன்பால்க் நல்ல வரம் பெற்ற இசை ஞானியாக இருந்தபடியால் துவக்கதிலிருந்தே இந்திய திருச்சபையை நன்றாக பாடல் பாடும் திருச்சபையாக மாற்றியிருந்தார். இந்தியாவுக்கே உரித்தான கதாகாலச்சேபம் முறையைக் கூட நற்செய்தி அருட்பணியில் புகுத்தியிருந்தார். சில நல்ல



வழக்கங்களை எடுத்து கிறிஸ்தவத்திற்கு தேவையான மாற்றங்களைச் செய்து பயன்படுத்தினார். திருமணத்தில் மணப்பெண்கள் இந்திய முறைபடியே தங்களை உடுத்தி அலங்கரித்துக்கொண்டு தெருவில் ஊர்வலம் வந்தனர். கிறிஸ்தவரல்லாதோர் திருமணத்தை வெகுவிமர்சையாக கொண்டாட மிகுந்த கடன்படுவதை பார்த்த சீகன்பால்க் கிறிஸ்தவ திருமணங்கள் வீண் செலவுகளைத் தவிர்த்து ஆடம்பரமின்றி நடந்திட அறிவுறுத்தினார். அடக்க ஆராதனையும் அவ்வண்ணமே மிகுந்த மரியாதையுடன் செய்யப்பட்டது. துக்கப்படும் கிறிஸ்தவ குடும்பத்துடன் திருச்சபையார் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். அனைவரும் அவ்விலத்திற்கு வந்து சற்று அமர்ந்தபின்பு பாடல்கள் பாடி ஜெபித்தனர். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு துக்கத்திலுள்ள மக்களை ஆறுதல்படுதினர். ஞானஸ்நானம் கொடுக்கபட்ட நேரத்தில் பல மாதங்கள் கிறிஸ்தவ போதனைப் பெற்ற புரமதஸ்தர் கிறிஸ்துவின் பேரில் தங்களுக்கிருந்த விசுவாசத்தை வெளிப்படையாக அறிவித்து இந்து மதத்தை வெறுத்து ஒதுக்கினர்.

ஜாதி அமைப்பை பொறுத்த மட்டில் தேவனுடைய வார்த்தை மக்கள் மனதில் கிரியைச் செய்வதையே சீகன்பால்க் நம்பினார். பொறுமையான போதனையினாலும் பயிற்சியினாலும் தேவனுக்குச் சித்தமான வேளையில் இந்த ஏற்றத்தாழ்வு திருச்சபையிலிருந்து மறைந்துவிடும் என நம்பினார். இவ்விதமாக இந்திய மயமாக்கப்பட்ட திருச்சபை இந்தியாவில் உருவாக சீகன்பால்க் பல முயற்சிகள் எடுத்தார்.

End Notes:

Books Referred and Recommended :

1. Neill, Stephen. History of Christian Missions. England: Penguin Books, 1984.
2. Beyreuther, Erich. BartholomaeusZiegenbalg. Madras: The Christian Literature Society, 1956.

**மிஷனெரிகளின்**

# நற்செய்தி பணியிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள்




**ஜா.ஜான் ஞானராஜ்** ஆசிரியர், திருநெல்வேலி

தூய.தோமா அவர்களுக்குப் பின் இயேசு சபை மிஷனரியாக தூய.சவேரியார் (பரி. பிரான்சிஸ் சேவியர்) பதினாறாம் நூற்றாண்டில் 1542 இல் தென் தமிழக கடற்கரைப் பகுதிக்கு வருகை தந்தார்கள். அன்று முதல் தமிழகத்தில் **கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனெரி**களின் நற்செய்திப் பணி தொடங்குகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டில் 1706 இல் **டென்மார்க் அரசர் நான்காம் ஃபிரெட்ரிக் மூலம் சீகன்பால்கு, புளுச்சோ ஆகிய இரு ஜெர்மானிய சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனெரிகள்** தமிழகம் அனுப்பப்பட்டனர். அன்று முதல் தமிழ்நாட்டில் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனெரிகளின் நற்செய்திப் பணி தொடங்கியது. இவர்களும் இவர்களுக்கு பின் வந்த கத்தோலிக்க கிறிஸ்தவ மற்றும் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனெரிகளும் செய்த நற்செய்தி பணி முறைகள் இன்றளவும் நமக்கு பாடங்களாக, உள்ளது. அவற்றை இந்த ஆய்வு கட்டுரையில் காண்போம்.

**1.நெருக்கடிகளின் மத்தியில் நற்செய்திப் பணி**

**கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனரிகள்**

தூய.சவேரியார் (07.04.1506 - 03.12.1552) போர்ச்சுகல் தலைநகரான லிஸ்பனில் இருந்து 07.04.1541 இல் கப்பல் மூலம் புறப்பட்டு போர்த்துகீசிய காலனியான கோவாவுக்கு 06.05.1542 இல் வந்து சேர்ந்தார். கோவாவில் இருந்து புறப்பட்டு கொச்சி வழியாக தென் தமிழக கிழக்கு கடற்கரையோர **மணப்பாடு, புன்னக்காயல், தூத்துக்குடி** ஆகிய கிராமங்களை மைய இடங்களாகக் கொண்டு மீனவ கிராமங்களில் பரதவர் மத்தியில் 1542 முதல் நற்செய்தி அறிவித்து வந்தார். பரதவர்களுக்கும் மூர் இஸ்லாமியர்களுக்கும் இடையே சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட மோதலின் காரணமாக மீனவர்கள் தங்களுக்கு கடற்படை மூலம் உதவி செய்து மூர் இஸ்லாமியரின் ஆதிக்கத்தில் இருந்து போர்த்துகீசியப்படை விடுதலை பெற்றுக் கொடுத்தமைக்காக ஏற்கனவே செய்த உடன்பாட்டின்படி நன்றி உணர்வோடு 1536 இல் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றிருந்தார்கள். ஆயிரக்கணக்கான மீனவ பெரியோர் ஞானஸ்நானமும் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்தவ நற்செய்தியை முழுமையாக அறிந்திருக்கவில்லை. அவர்கள் அனைவருக்கும் கிறிஸ்தவ நற்செய்தியை அறிவிக்கவும் ஞானஸ்நானம் பெற்றிராத ஆயிரக்கணக்கான இள வயதினர் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும் தூய. சவேரியார் அனுப்பப்பட்டிருந்தார்.

அக்காலத்தில் தென் தமிழக கடற்கரையோர பகுதிகளிலும் தென் திருவாங்கூர் சமஸ்தான கடற்கரையோர பகுதிகளிலும் போர்த்துக்கீசியரின் ஆளுகை ஓரளவே இருந்தது. கயத்தாறு பாண்டிய மன்னர், வெட்டும் பெருமாள் பாண்டியன், மதுரை நாயக்க ஆட்சியாளர்கள், ராமநாதபுரம் சேதுபதி மன்னர், தென்திருவாங்கூரையும் தென் தமிழகத்தின் ஒரு பகுதியையும் ஆட்சி செய்த உன்னி கேரள வர்மன் என பலரின் ஆளுகையும் கடற்கரையோரங்களில் இருந்தது. முத்து குளித்தல் மற்றும் மீன்பிடித்தல் உரிமைகளில் இவர்களுக்கும் போர்த்துகீசியருக்கும் இடையே போட்டி அதையொட்டி போர்கள் நடைபெற்றுக் கொண்டே இருந்தது. போர்த்துகீசியர் மீதான பகைமையை இவர்கள் பலமுறை தூய. சவேரியாரிடமும் கத்தோலிக்க கிறிஸ்தவ மீனவ பரதவர், முக்குவரிடமும் காட்டினர்.

தூய. சவேரியார் பலமுறை இதனால் இடம் மாறும் சூழல் ஏற்பட்டது. இலங்கையின் மன்னாருக்கும் செல்லும் சூழல் ஏற்பட்டது.

போர்த்துக்கீசிய படை தளபதிகள் ஏழை மீனவர்களை சுரண்டுவதை சவேரியார் கண்டித்தமையால் அவர்களும் சவேரியாருக்கு நெருக்கடி தந்தனர். ஆனாலும் நெருக்கடிகளுக்கு அஞ்சாமல் கிறிஸ்தவ நற்செய்தியை கடற்கரையோர மீனவர்களுக்கு மட்டுமல்லாமல் உட்புற கிராமங்களில் வசித்த நாடார், ஆதிதிராவிடர் மற்றும் பிற சமூகத்தினருக்கும் அறிவித்து வந்தார். இன்றளவும் அவர்கள் நாங்கள் சவேரியார் காலத்துக் கிறிஸ்தவர்கள் என பெருமையோடு சொல்வதைக் காணலாம்.

வீரமாமுனிவர் (08.11.1680 - 04.02.1747) தமிழகம் வந்த காலகட்டத்தில் தமிழகத்தில் கிறிஸ்தவர்களுக்கு கடும் துன்பங்கள் ஏற்பட்டிருந்தது. தஞ்சை நீரோ என அழைக்கப்பட்ட ஷாஜி எனும் கொடுங்கோல் அரசரால் கிறிஸ்தவர்களும் குருக்களும் சிறைப்படுத்தப்பட்டனர். துன்புறுத்தலால் கர்வாடு அடிகளார் சிறையிலேயே மரணம் அடைந்தார்.

தஞ்சை ஷாஜி மன்னரால் வெளியேற்றப்பட்ட 12 ஆயிரம் கிறிஸ்தவர்களையும் ஏலாக்குறிச்சியில் குடியேற்றி அந்த குடியேற்றத்திற்கு **திருகாவலூர்** என பெயரிட்டார்.

ஷாஜிக்கு பின்பு தஞ்சை அரசரான சரபோஜி தொடக்கத்தில் கிறிஸ்தவர்களுக்கு சாதகமாக இருந்த போதிலும் பின்னர் கிறிஸ்தவர்களுக்கு தொல்லை கொடுத்து வந்தார். ராணி மங்கம்மாளுக்குப் பின்வந்த அவரது பேரன் விஜயரங்க சொக்கநாதன் சிற்றின்பங்களில் நாட்களை கழித்ததால் அவரது அரசாட்சி கிறிஸ்தவர்களுக்கு சாதகமாக இல்லை.

தஞ்சாவூர், மதுரை ஆட்சியின் நிலை இப்படி இருக்க மறவநாட்டில் சேதுபதிகளின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு கடும் துன்பம் ஏற்பட்டது. கிழவன் சேதுபதி என்ற விஜயரங்கநாத சேதுபதி புனித அருளானந்தர் எனும் ஜான் டி பிரிட்டோவை கழுவேற்றிக் கொன்றார். அக்காலத்தில் தமிழக **இயேசு சபை** பொருளாதார நெருக்கடியில் இருந்தது.

தஞ்சாவூரில் உடையார் எனும் குறுநில மன்னர் கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவ குருக்களையும் கடுமையாக துன்புறுத்தினார். அவரால் அவர்களனைவரும் தாங்கள் வசித்த இடத்தை விட்டு வெளியேறினர். இடப்பெயர்ச்சி செய்த அந்த கிறிஸ்தவர்களை வீரமாமுனிவர் **ஆரியனூரி**ல் குடியேற்றினார். கயத்தாரில் அவர் பணி செய்தபோது பாளையக்காரர் லோகநாதன் பெரும் துன்பங்களை அவருக்கு கொடுத்தார். இவ்வாறு பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்ட போதும் அவர் பின்வாங்காமல் நற்செய்தி பணியைத் தொடர்ந்து செய்தார்.

**சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகள்**

1706 இல் தமிழ்நாட்டிற்கு வந்த முதல் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகளான சீகன்பால்கும் (10.07.1682 - 23.02.1719), புளுச்சோவும் பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் தான் நற்செய்திப் பணிகளை செய்தனர். இவர்கள் தமிழக கடற்கரையில் தரையிறங்குவதற்கு படகைக் கொடுக்க கப்பல் கேப்டன் மறுத்த நிலையில் ஜெர்மானிய அதிகாரியின் உதவியால் படகு மூலம் இவர்கள் தரங்கம்பாடியில் கரையேறினர். அரச மிஷனரிகள் என்ற ராஜ முத்திரை கடிதத்துடன் இவர்கள் வந்த போதும் தரங்கம்பாடி டேனிஷ் ஆளுநர் இவர்களை ஊருக்குள் அனுமதிக்கவில்லை ஹார்அட்ரூப் என்பவர் இவர்களை அழைத்துச் சென்று குடியிருக்க ஏற்பாடுகள் செய்தார்.

டென்மார்க்கில் இருந்து இவர்களுக்கு அனுப்பப்பட்ட பணத்தைக் கொண்டு வந்த கப்பல் சேதுமடைந்ததால் பணம் இவர்களுக்கு கிடைக்காமல் போனது. அதேபோன்று தரங்கம்பாடி வரை இவர்களுக்கு வந்த பணப்பெட்டியைக் கப்பலில் இருந்து படகுக்கு மாற்றியபோது கப்பல் ஊழியரின் கவனக்குறைவால் அது கடலுக்குள் விழுந்து மூழ்கியது கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற பழமொழியின் படி பணம் அருகில் வந்தும் கிடைக்காமல் போனது அப்போதும் சோர்ந்து போகாமல் மிஷனெரி பணியை இருவரும் மகிழ்ச்சியோடு தொடர்ந்தனர்.

வேதாகம மொழிபெயர்ப்பு பணியையும் சீகன்பால்கு நெருக்கடிகள் மத்தியில் தான் செய்தார். அந்நேரம் டேனிஷ் கவர்னரால் சீகன்பால்கு தவறான முறையில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறையிலும் வேதாகம மொழிபெயர்ப்பு பணியையும் நற்செய்தி பணியையும் செய்தார்.

கனம். இரேனியஸ் (05.11.1790 - 05.06.1838) C.M.S மிஷனரியாக தமிழ்நாட்டிற்கு வந்த 04.07.1814 முதல் C.M.S தலைமை மிஷனரி பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்ட 1835 வரையிலும் மிகச் சிறப்பாக நற்செய்தி அறிவிப்பு பணியை அவர் செய்த போதும் பொறாமையால் பல்வேறு நெருக்கடிகளை C.M.S., M.C.C கமிட்டி என்னும் சென்னை கமிட்டியார் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருந்தனர். மனதளவில் அவரை வேதனைப்படுத்திக் கொண்டே இருந்தனர். ஆனாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் மிகச் சிறப்பாக ஆண்டவருடைய பணி என எண்ணி நற்செய்தி பணியை சிறப்பாக செய்தார்.

1838 இல் ரேனியஸ் மரணம் அடையும் வரை நற்செய்தி பணியை தொடர்ச்சியாக செய்தார். நெருக்கடியின் மத்தியிலும் நாம் நற்செய்திப் பணியை செய்ய வேண்டும்.

**2.நற்செய்தி அறிவிப்பில் சிறந்த விசுவாச அடித்தளத்தைத் தந்த மிஷனரிகள்**

**கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனரிகள்**

நற்செய்தி அறிவிப்பில் சிறந்த விசுவாச அடித்தளத்தை தந்தவர் தூய சவேரியார். சவேரியார் தமிழை முழுமையாக அறிந்தவர் அல்ல ஓரளவு அறிந்திருந்தார். அவர் பேசும்போது அதை தமிழில் மொழிபெயர்க்க மொழிபெயர்ப்பாளர்களை உடன் அழைத்துச் செல்வார். அவர் தூத்துக்குடி வந்த போது தம்முடன் கோவா தூய.பவுல் கல்லூரியில் கல்வி கற்று வந்த தூத்துக்குடியைச் சேர்ந்த மூவரை அழைத்து வந்தார்.

**தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் ஆமென்** எனும் மூவொரு கடவுளை ஐக்கியப்படுத்தும் சிலுவை அடையாளம் வரையும் ஜெபத்தில் இருந்து அவர் நற்செய்தியைச் சொல்ல ஆரம்பிப்பார்.

விசுவாச பிரமாணம், பத்து கட்டளைகள், கர்த்தருடைய ஜெபம், அருள் நிறைந்த மரியே ஜெபம், ராஜ கன்னி மாதா ஜெபம், ஒப்புரவு ஜெபம் ஆகியவற்றை லத்தீனிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து அவற்றை சவேரியார் மனப்பாடம் செய்து வைத்திருந்தார். அவற்றைத் தாமே தென்தமிழகத்தில் நேரடியாக சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் பெரியோர்களுக்கும் தாய்மார்களுக்கும் கற்றுக் கொடுத்தார். அனைவரையும் ஒன்று கூட்ட கையில் ஒரு மணியை வைத்து அதை அடித்தவாறு கிராமங்களில் தெருக்கள் அனைத்தையும் சுற்றி வந்தார். இதன் மூலம் மக்கள் ஒன்று கூட்டப்பட்டனர். அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டு மேற்கண்ட ஜெபங்கள் பத்து முறை, பன்னிரண்டு முறை சொல்லும் படி சவேரியாரால் கற்றுக் கொடுக்கப்பட்டது.

பத்து கட்டளைகளை கடைப்பிடிப்பவரே நல்ல கிறிஸ்தவர், கடைபிடிக்காதவர் மோசமான கிறிஸ்தவர் என்பதை தமது நற்செய்தி அறிவிப்பில் அனைத்து இடத்திலும் தூய சவேரியார்

உறுதிபட தெரிவித்து வந்தார்.

பிற மதத்தினருக்கு நற்செய்தி அறிவித்து கிறிஸ்துவ விசுவாசத்தில் அவர்களைக் கொண்டு வருவது தான் ஆண்டவர் கொடுக்கிற பேரானந்தம், பேராறுதல் என்பதை சவேரியார் வலியுறுத்தி வந்தார். இவ்வாறு நற்செய்தி அறிவிப்பதின் முக்கியத்துவம் அவரால் வலியுறுத்தப்பட்டது.

பெரிய அளவில் தேவாலயம் கட்ட வசதியில்லாத ஏழை மீனவர்கள் ஆண்டவரை ஆராதிக்க தெருக்கள் தோறும் தெருமுனையில் பெரிய சிலுவை நடப்பட்டு அதன் மேல் பனையோலை மேற்கூறை அமைக்கப்பட்டு சிற்றாலயம் அமைக்கப்பட்டது. இது **குருசடி** எனப்பட்டது. இங்கு அனுதினமும் காலையிலும், மாலையிலும் ஜெபம் நடத்தும் முறை அனைத்து மீனவக் கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பழைய வழிபாடுகளை மீனவர்கள் மறந்து போகும் அளவிற்கு சவேரியார் அமைத்த விசுவாச அடித்தளம் இருந்தது.

**சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகள்**

தமிழகத்தில் நற்செய்தி அறிவிப்பதில் சிறந்த அடித்தளத்தை தந்த சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரி கனம். ரேனியஸ் ஐயரவர்கள் ஆவார். தூய பவுல், தூய சவேரியாருக்குப் பின் ஏராளமான பிற மதத்தினரை கிறிஸ்தவராகக் கொண்டுவந்த அப்போஸ்தலர் என இவர் புகழப்படுகிறார்.

அக்காலத்தில் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகளாக வருகை தந்த அனைவருமே கோடை காலத்தில் குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி போன்ற கோடை வாசஸ்தலங்களுக்கு ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களுக்கு சென்று விடுவது வழக்கமாக இருந்தது. அங்கிருந்தவாறு சபை பணிகளை கவனிப்பார்கள். ஆனால் தமிழகத்தில் வாழ்ந்த 1814 - 1838 வரையிலான 24 ஆண்டு காலத்தில் ஒருமுறை கூட இரேனியஸ் கோடை காலத்தில் ஓய்வெடுக்க கோடை வாசஸ்தலங்களுக்கு சென்றதில்லை என்பது இவருக்குரிய சிறப்பம்சம். பகலிலும் இரவிலும் என தொடர்ச்சியாக இவர் நற்செய்தி பணி செய்தார்.

அனுதினமும் காலை, மாலை ஜெபம், ஜெபத்தில் அனுதினமும் வேத பாடம் வாசித்தல், வாசித்த வேத பாடத்தில் இருந்து அருளுரையாற்றுதல் எனும் சிறந்த ஒழுங்குமுறை இவரால் உருவாக்கப்பட்ட சபைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கிராமம் கிராமமாக தாமும், விசாரணை உபதேசியார், தலைமை உபதேசியார் தலைமையில் செமினரி மாணவர்களை அனுப்பியும் துண்டு பிரசுரங்களை கொடுத்து தெருக்களில் நற்செய்தியை அறிவிக்கச் செய்தார்.

அக்காலத்தின் தென் தமிழக பிரபல திருவிழாவான குரங்கணி முத்துமாரியம்மன் கோவில் ஆனித் திருவிழா நடைபெற்ற அதே காலகட்டத்தில் **மாம்பழச்சங்கம்** எனும் பெருவிழாவை ஆண்டுதோறும் பாளையங்கோட்டையில் நடைபெறச் செய்தார்.

இவர் தம்மால், தம் மூலம் அனுப்பப்பட்ட உபதேசிமார்களால் நற்செய்தியைக் கேட்டறிந்த பிற மதத்தினரை சோதித்தறிந்து முதலில் ஞானஸ்நான ஆயத்தக்காரராகச் சேர்ப்பார். அடுத்த முறை சந்திக்கையில் அவர்களது விசுவாசம், வேதாகம அறிவை பரிசோதித்தே ஞானஸ்நானம் கொடுத்து வந்தார்.

சபை ஊழியர் பணியைச் செய்யும் ஆசிரியர் என்ற திட்டத்தை சபைகளில் நடைமுறைப்படுத்தினார். இந்துக்களும் கிறிஸ்தவர்களும் கலந்து வாழ்ந்த கிராமங்களில் நற்செய்தி அறிவிப்பில் இத்திட்டம் பெரிய பலனைக் கொடுத்தது. மேற்கண்ட முறைகள் மூலம் சிறந்த விசுவாச அடித்தளத்தை ரேனியஸ் சபைகளில் அமைத்தார்.

**3.வழிபட்டு வந்த வழிபாட்டிடங்களையே தேவாலயமாக்குகிற முறை**

கிராமத்தார் அனைவரும் கிறிஸ்தவர்களான போது புதுக்கிறிஸ்வர்களின் அச்சத்தைப் போக்கவும் பழைய வழிபாட்டை நோக்கி அவர்கள் செல்லாதபடி தடுக்கவும் ஏற்கனவே அவர்கள் தெரு முனைகளில் வழிபட்டு வந்த வழிபாட்டிடங்களையே குருசடி எனும் சிற்றாலய வழிபாட்டிடமாக தூய.சவேரியார் காலத்தில் மாற்றப்பட்டிருந்தது.

ஏற்கனவே வழிபட்டு வந்த வழிபாட்டிடங்கள் கிராமம் முழுவதும் கிறிஸ்தவரான கிராமங்களில் தேவாலயமாக்குகிற முறையை S.P.C.K மிஷனரிகளும் தொடங்கியிருந்தனர்.

**4.காலரா, விஷக்காய்ச்சல், வறட்சியினால் ஏற்பட்ட பஞ்சம் மற்றும் பெருவெள்ளம் காலங்களில் மருத்துவ மற்றும் பேரிடர் உதவி**

ரேனியஸ் பணிசெய்த காலத்தில் 1832 மற்றும் 1837 இல் காலரா நோய் கடுமையாகத் தென் தமிழகத்தைத் தாக்கியது பல்லாயிரக்கணக்கானோர் மரணம் அடைந்தனர். அந்நேரம் ரேனியஸ், பிற C.M.S மிஷனரிகள் மற்றும் சபை ஊழியர்கள் மருந்து மாத்திரைகளுடன் தென்தமிழக கிராமங்களெங்கும் சுற்றியலைந்து மருத்துவப் பணி செய்தமையால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் உயிர் பாதுகாக்கப்பட்டது. வறட்சியைத் தொடர்ந்து வந்த பெருவெள்ளம் அதைத் தொடர்ந்து வந்த விஷக் காய்ச்சல் போன்ற காலங்களில் மிஷனெரிகள் உதவிகள் செய்தனர். 1830 இல் மழையின்மையால் ஏற்பட்ட கடும் வறட்சி, அதனால் ஏற்பட்ட உணவுப் பஞ்சம் காலத்தில் ரேனியஸ் பேருதவிகளை மத வேறுபாடு இன்றி செய்தார்.

பேராயர் சார்ஜென்ட் காலத்தில் 1877 இல் ஏற்பட்ட தாது வருடப் பஞ்ச காலத்தில் மத வேறுபாடு இன்றி உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கோயம்புத்தூர் காய்ச்சல், திண்டுக்கல் காய்ச்சல் பரவிய காலத்தில் மிஷனெரிகள் மத வேறுபாடு இன்றி மருந்துகளை வழங்கினர். மேற்கண்ட காரியங்களின் போது பல்லாயிரக்கணக்கானோர் கிறிஸ்தவத்தை ஏற்றனர்.

கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனெரி கௌசானல் அடிகளார் தந்தை ட்ரிங்கால் அடிகளார் போன்றோர் பேரிடர் காலங்களில் செய்த நற்பணிகள் ஏராளமானோரைக் கிறிஸ்துவண்டைக் கொண்டு வந்தது.

மேற்கண்ட நான்கு காரியங்களை சிறப்பாக தொடக்ககால மிஷனெரிகள் நற்செய்தி அறிவிப்பில் பின்பற்றினர். அது அக்காலத்தில் மக்கள் திரள் திரளாக கிறிஸ்துவண்டை வர காரணமாயிற்று. அவற்றை நற்செய்திப் பணியில் தற்காலங்களிலும் நாம் பின்பற்றுவோம்.




# சங்ககிரி துருகத்தின் கன்மலை பங்களாவும், சங்கை குட்ஈவ் மாப்ஸ் ஐயரின் காலமும்

ஜே. பர்னபாஸ் சேலம் வரலாற்றுச் சங்கம்

**'ஆழமாய்த் தோண்டி கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போட்டு வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின் மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.'** – லூக்கா 6:48.

'கற்பாறையின் மேல் கட்டினவன் புத்தியுள்ளவன்! பெருமழை பெய்தது! பெருமழை பெய்து, நீருயர்ந்தது! பெருமழை பெய்து நீருயர்ந்தது! – அந்த வீடு நிலைத்து நின்றது!'

நினைவில் நின்ற ஓய்வுநாள் பாடசாலை பாடல்.

**சங்ககிரி துருகம் : (Sankaridrug)**

ஒசூர் நீங்கலாக சங்ககிரி உட்பட ஒரு மிகப்பெரிய நிலப்பரப்பு ஒருங்கிணைந்த சேலம் மாவட்டமாக 1792 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் வசம் வந்தது. இதனைத் தொடர்ந்து கொங்குநாட்டின் தலைநகராக விளங்கிய சங்ககிரியின் துருக மலைக் கோட்டைக் கொத்தளம் திப்புவின் கோட்டைக் காப்பாளரிடமிருந்து பிரிட்டீஷ் கிழக்கிந்திய கம்பெனி படையின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இந்த சங்ககிரி துருக மலைக்கோட்டைக் கொத்தளத்தை காவல் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிரிட்டீஷ் தளபதி ஜேம்ஸ் ஓரம் (Lt.Col.James Oram - Commandant of the British Garrison stationed at Sankaridrug) சங்ககிரி துருக மலைக் கோட்டை மீதுள்ள காவற்கோபுரங்களில் காவல்போட்டும், அடிவாரத்தில் பாடி (Tents) வீடுகளை அமைத்தும் கோட்டையின் பாதுகாப்பைப் பலப்படுத்தினார்.

**சங்ககிரி துருகம் - ஜேம்ஸ் ஓரம் மாளிகை:**

தளபதி ஜேம்ஸ் ஓரம் சங்ககிரி துருக மலைக்கோட்டை அடிவாரத்தில் அமைந்திருக்கும் ஒரு பெரிய கற்பாறையின் மீது தனக்கு ஒரு மாளிகையைக் கட்டிக்கொள்ள தீர்மானித்தார். ஆனால், அங்கு ஏற்கெனவே திப்புவின் படைத் தளபதி ஷேர்க்கான் ஒரு கட்டிடத்தைக் கட்டியிருந்தார்; அந்த கட்டிடம் பழுதடைந்திருந்தது, எனவே தளபதி ஜேம்ஸ் ஓரம் அந்த கட்டிடத்தை பழுதுபார்த்து, பலப்படுத்தி, புதுப்பித்து தனது குடியிருப்பாக மாற்றி 1792 ஆண்டு இறுதியில் அங்கே குடியேறினார். தளபதி ஜேம்ஸ் ஓரம் பின்நாட்களில், மாறுதலாகிச் சென்றபோது அவரது மருத்துவர் பைட்டன் (Assistant Surgeon J.Peyton) இந்த மாளிகையில் குடியேறினார். அதன்பிறகு சங்ககிரி துருக மலைக் கோட்டைக் கொத்தள காப்பாளர்களாக பொறுப்பு வகித்த தளபதிகள் மேஜர் கப்பேஜ், கர்னல் வால்ஸ், ஆகியோர் இந்த கட்டிடத்தில் தங்கியிருந்தனர்.

சங்ககிரி துருகம் படிப்படியாக தனது இராணுவ முக்கியத்துவத்தை இழந்துவந்தது. தளபதி கேப்டன் ஜார்ஜ் இந்த கொத்தளத்தின் காப்பாளராக இருந்தபோது 1823 ல் அவர் சேலம் கோட்டைக்கு மாற்றப்பட்டார். பின்னர் இராணுவ வீரர்களின் குடியிருப்பாக மாறிப்போன சங்ககிரி துருகம் பின்பு 1832ல் முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டது.

**சங்கை குட்ஈவ் மாப்ஸ் ஐயர்** (Rev.Good eve Mabbs, L.M.S.,-period of service -1862-1865) பார்வையில்

**சங்ககிரி துருகம் - ஜேம்ஸ் ஓரம் மாளிகை:**

இப்படி தனது இராணுவ முக்கியத்துவத்தை இழந்த இந்தக் கட்டிடம், காலப்போக்கில் பராமரிப்பின்றி பாழடைந்துபோனது. இந்த மாளிகையை அப்பொழுது துவக்கப்பட்டிருந்த சங்ககிரி மிஷன் பணித்தளத்திற்கான எதிர்கால வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு சங்கை மாப்ஸ் ஐயர் 1863ஆம் ஆண்டுவாக்கில் இந்த கன்மலை பங்களாவை லண்டன் மிஷனெரி சங்கத்திற்காக வாங்க பெருமுயற்சி எடுத்தார்; ஆனாலும் காரியம் கைகூடாமல் போனது. ("The Station at Sankaridrug was started with the same idea as that of Attur, namely, that it might eventually become the headquarters of a missionary, ... Mbbs tried in vain to secure the Travellers Bungalow as a missionary's residence." - page no.32, A Hundred Years of Salem Mission History - Rev.T.C.Witney, B.A., 1936.) இந்த நிலையில் 1864 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இன்று மகுடஞ்சாவடி என்று அழைக்கப்படும் அன்றைய McDonal's Choultry யில் இருந்த பயணியர் மாளிகையை (Traveller's Bungalow) சேலம் லண்டன் மிஷனுக்காக சங்கை மாப்ஸ் ஐயர் வாங்கியிருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது.

**சங்ககிரி துருகம் கன்மலை பங்களா -1910:**

1905 ஆம் ஆண்டு ஆங்கில அரசாங்கம் துருக மலைக் கோட்டையையும், தளபதி ஜேம்ஸ் ஓரம் கட்டியிருந்த கன்மலை மாளிகையையும்,பொதுப் பணித்துறை பராமரிப்பில் விட்டது. 1910 ஆண்டு தளபதி ஜேம்ஸ் ஓரம் தங்கியிருந்த மாளிகை முற்றிலுமாக சேதமடைந்த போது, அது அகற்றப்பட்டு, அந்த இடத்தில் தற்போதுள்ள பயணியர் மாளிகை கட்டப்பட்டது. இதனைக் குறிப்பிடும் 1910 என்று பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாளிகையின் பக்கவாட்டு வாசலின் மீது பதிக்கப்பட்டுள்ளது.

கொடிய வெப்பம் நிலவும் இந்த சங்ககிரி பகுதியில் இந்த பெரும் கற்பாறை மீது கட்டப்பட்டுள்ள இந்த மாளிகையின் உள்ளே மிகவும் குளிர்ச்சியாகவும், இதமாகவும் உள்ளது. இது ஆங்கிலேயர்களின் கட்டிடக் கலையின் சிறப்பம்சம்.

**சங்கை குட்சவ் மாப்ஸ் ஐயரின் காலம்- ஒரு மீள் பார்வை:**

ஐயரின் திட்டப்படி இந்த கன்மலை பங்களா வாங்கப்பட்டிருந்தால், சங்ககிரி பணித்தளம் சிறப்படைந்திருக்கும். ஒவ்வொரு தாலுக்கா தலைமையிடமும் இதே போல பல ஊர்களின், கிராமங்களின், மையங்களாக அங்கங்கே செயல்பட அவைகளை ஒருங்கிணைக்க ஒரு மிஷனெரியின் தலைமையில் தலைமையிடம் என்று சங்கை மாப்ஸ் ஐயரின் தொலைநோக்குத் திட்டங்கள் நிறைவேறாமல் போனது நமது துரதிஷ்டமே. சேலத்தில் தனது 4 ஆண்டுகால பணிகளை முடித்துக் கொண்டு அவர் தாய்நாடு திரும்பும்படி நேர்ந்துவிட்டது. இந்த பகுதிகளில் நிலவிய கொடிய வெப்பம், மற்றும் காலரா தொற்று பயமுமே காரணங்கள் ஆகும். சேலம் வந்த முதல் இரண்டு மிஷனெரிகளின் அகால மரணம், அவர்களுக்கு முன்பாகவே அவர்தம் மனைவிமார்களின் மரணம், சங்கை லெக்லர் ஐயரின் காலரா மரணம், அவருக்கு பின் சேலம் மிஷன் பொறுப்பை எடுத்த சங்கை மாப்ஸ் ஐயர், சங்கை W.E.மாரிஸ் ஐயர் (Rev.W.E.Morris, L.M.S.,- period of service -1865-1869) ஆகிய இருவரும் தலா நான்கு வருடங்களிலே தங்கள் தாய்நாடு திரும்பும்படி நேர்ந்தது. இந்த சேலம் பகுதியில் நிலவிய கொடிய வெப்பம், மற்றும் காலரா போன்ற உயிர்கொல்லி நோய்களின் பரவல் ஆகியவையே. இந்த காலங்கள் ஒரு இடைக்காலமாக சேலம் மிஷன் வரலாற்றில் கருத இடமுண்டு. சங்கை மாப்ஸ் ஐயரின் தொலைநோக்குத் திட்டங்களை அவர் நிறைவேற்றி, இங்கு பலஆண்டுகள் அவரின் சேவை தொடர்ந்திருந்தால் சேலம் மிஷன் வரலாறு மகத்தானதொரு மாறுதலை, வளர்ச்சிகளைப் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

படம் :சங்ககிரி துருக மலைக்கோட்டை அடிவாரத்தில் அமைந்துள்ள பெரும்பாறையின் மேல் கட்டப்பட்டிருக்கும் பயணியர் மாளிகை (Sankeridurg Traveller's Bungalow)

## வரலாற்றுச் சுற்றுப்பயணம்



கடந்த மாதம் 14 தேதி சென்னையிலிருந்து நண்பர்களாகவும் குடும்பமாகவும் வந்திருந்த அசோக் மேசாக் மற்றும் ஜோசப் செல்வராஜ் குழுவினர். தென் தமிழகத்தில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும் இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு பாளையம்கோட்டையில் உள்ள மில்டரி லைன் ஆலயத்தில் உள்ள பேராயர் சார்ஜென்ட் மற்றும் வேதாகம மொழிபெயப்பு பணி செய்த கனம். ஹென்றி பவர் நினைவிடம் மற்ற மிஷனெரிகளின் நினைவிடங்களையும், அவர்கள் செய்த பணிகளையும் கண்டு வியந்தார்கள்.



# ஆசிரியர்களாக பணியாற்றிய மிஷனெரிகள்

அருள்திரு.H. ஜான் சாமுவேல்
பண்டாரசெட்டிவிளை

செப்டம்பர் மாதம் ஆசிரியர்களுக்கு சிறப்பான மாதமாகும். ஆசிரியர்கள் செய்யும் நற்பணிகளை போற்றவும், அவர்களை உற்சாகப்படுத்தும் விதமாகவும் செப்டம்பர் ஐந்தாம் தேதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகின்றது. இன்று நம்மக்களில் பலர் நல்ல கல்வி கற்று நல்ல நிலையில் இருப்பதற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்த வெளிநாட்டு மிஷனெரிகள் என்ற உண்மையை யாரும் நிராகரிக்க முடியாது. இன்று தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு என்று **பாளையங்கோட்டை** நகரம் அழைக்கப்படுமளவிற்கு மிஷனெரிகளின் கொடுத்த கல்வி தான் காரணம்.

திருச்பைகளை உருவாக்குவதற்கும், ஆலயங்களை கட்டுவதற்கும் கொடுத்த முக்கியத்துவத்தை மிஷனெரிகள் கல்விக்கூடங்களுக்கும் கொடுத்தார்கள். ஓர் ஆலயம் அதின் அருகில் பள்ளிக்கூடம் என்பதுதான் மிஷனெரிகளின் தரிசனமாக இருந்தது. மிஷனெரிகள் கொடுத்த பள்ளிக்கூடங்களே நம்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தையே மாற்றியது. மிஷனெரிகள் பள்ளிக்கூடங்களைக் ஆரம்பித்ததோடு கூட அவர்களின் கடைமை நின்றுவிடவில்லை. மாறாக அநேக பள்ளிக்கூடங்களில் அவர்களே ஆசிரியர்களாகவும், தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றி, மக்களை நல்வழிப்படுத்தியிருக்கின்றார்கள்.

### கனம் ஜாண் தாமஸ் ஐயரவர்கள்

கனம் ஜாண் தாமஸ் ஐயரவர்களின் ஊழியத்தின் பலன் தான் இன்றைய மெய்ஞானபுரம். உலகத்தில் பல பகுதிகளில் நல்ல நிலையில் வசித்துக் கொண்டுக்கும் அவர்களின் உயர்விற்கு வித்திட்டவர்கள் கனம் ஜாண் தாமஸ் ஐயரவர்களே. தன்னை மட்டுமல்லாது தன்னுடைய பிள்ளைகளையும் ஊழியத்தில் இணைத்து கனமான ஊழியத்தினை செய்தார்கள். கனம் ஜாண் தாமஸ் ஐயரவர்கள் பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தை தன் மூத்த குமாரனாகிய டேவிஸ் தாமஸ் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். டேவிஸ் தாமஸ் அவர்கள் நிர்வாகத்தின் பொறுப்பிற்கு வரும் பொழுது அவரது வயது 18. டேவிஸ் தாமஸ் அவர்கள் நிர்வாகத்தினை மிகவும் சீரும் சிறப்புமாக கவணித்து, பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் வித்திட்டார்கள். தன்னுடைய இளைய குமாரணாகிய ஜேம்ஸ் தாமஸை ஆண்கள் விடுதிப்பள்ளியின் தலைமையாசிரியராக்கினார்கள். ஜேம்ஸ் தாமஸ் அவர்கள் தலைமை ஆசிரியர் பொறுப்பினை ஏற்ற பொழுது அவருக்கு வயது சுமார் 16. இருவரும் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள். டேவிஸ் தாமஸ் மற்றும் ஜேம்ஸ் தாமஸ் ஆகிய இருவரும் இங்கிலாந்தில் கல்வி கற்று, இந்தியா வந்தவர்கள். தங்கள் தந்தையோடு இணைந்து கல்வியின் மூலம் அவர்களாற்றிய தொண்டு மிகவும் உன்னதமானது.

### கேமரர் மற்றும் அனி கேமரர்

கனம் கேமரர் ஐயரவர்களின் காலம் நாசரேத் மிஷன் வளர்ச்சியில் மிகவும் முக்கியமான காலம் ஆகும். கனம் கேமரர் ஐயரவர்களுடன் சேர்ந்து அவரது துணைவியாரான அனி கேமரர்

அம்மையாரும் இணைந்து செயல்பட்டார்கள். தன்னுடைய 20ம் வயது முதல் கனம் ஐயரவர்களுடன் இணைந்து நாசரேத் பகுதியில் தன் ஊழியத்தினை ஆரம்பித்தார்கள். நாசரேத் வந்ததும் அங்கிருந்த பெண்களின் நிலை அறிந்த அம்மையார், பெண்களுக்கு கல்வியறிவு கொடுக்க வேண்டுமென்பதில் பேராவல் கொண்டிருந்தார். பெண்களுக்கென்று தனியே ஒரு பள்ளிக்கூடம் அமைக்கவேண்டுமென்று தீர்மானித்தார், ஏற்கெனவே 1820-ம் ஆண்டு ஹாப் ஐயரவரக்ள் ஆரம்பித்து பின்னர் அவரது காலத்திற்கு பிறகு இடையில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த பெண்கள் பாடசாலைக்கு மறு உயிர் கொடுத்தார். 1843-ம் ஆண்டு அனி கேமரர் அம்மா அவர்களின் சிந்தனையில் உருவான பள்ளி செயல்பாட்டிற்கு வந்தது. அப்பள்ளின் முதல் தலைவரும், முக்கிய ஆசிரியையுமாய் இருந்து அப்பள்ளியை வழிநடத்திச் சென்றார். அக்காலத்தில் பெண்கள் கல்வி கற்பது என்பது சிந்தனையில் கூட சாத்தியமாகாத காலம். பெண்களுக்கு கல்வி கற்று கொடுப்பதைக்காட்டிலும், பசுக்களுக்கு கல்வி கற்று கொடுக்கலாம் என்று மக்கள் அம்மையாரைப் பார்த்து ஏளனம் செய்வார்களாம். எனினும் தன் ஆர்வத்தைவிடாது ஒரு நல்ல ஆசிரியையாய் பெண் பிள்ளைகளை வீடு தேடி சென்று அவர்களை பள்ளிக்கு அழைத்து வருவார்கள். எவ்வளவு முயற்சிகள் எடுத்தாலும் பெற்றோர் பெண் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காக அனுப்பமாட்டார்கள். எனவே அம்மையார் பெண் பிள்ளைகளுக்கு துணியும் சில சமயங்களும் பணமும் கூட கொடுத்து பெண்பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அழைத்து வருவார்கள். அனி கேமரர் அம்மையார் ஒரு நல்லாசிரியராக இருந்து அநேக பெண்பிள்ளைகளின் வாழ்வில் ஒளியேற்றினார்கள்.

### மெஞ்ஞானபுரத்தின் முதல் பெண் இந்திய ஆசிரியை

பெண்கள் கல்வி பல இடங்களில் முக்கியத்துவம் பெற்றது. அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கு என்ற காலம் கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தது. மெஞ்ஞானபுரம் பெண்கள் விடுதியில் பெண்கள் தங்கி கல்வி கற்று வந்தார்கள். அவற்றுள் லேயாள் என்ற ஒரு மாணவி கல்வியில் சிறந்து விளங்கி அப்பள்ளியின் முதல் இந்திய பெண் ஆசிரியையாக நியமிக்கப்பட்டாள். கனம் ஜாண் தாமஸ் ஐயரிடத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் பெற்றவராக இருந்தார். மக்களுக்கும், பள்ளி படிக்கும் பிள்ளைகளுக்கும் லேயாளை மிகவும் பிடிக்கும். அவ்வளவு நெருக்கமாக பழகி பிள்ளைகளை வாழ்வில் முன்னேற்றினார். திருமண வயதினை எட்டியதும் கனம் ஜாண் தாமஸ் ஐயரவர்கள், மாசிலாமணி உபதேசியாருக்கு மணமுடித்து வைத்தார்கள். திருமண வாழ்வும் ஆசீர்வதிக்கப்பட்டடு மூன்று பிள்ளைகள் பிறந்தது. நான்காவது பிரசவத்தின் போது சற்றும் எதிர்பாராதவிதமாக காய்ச்சல் வந்தப்படியினால் சில நாட்களுக்குள்ளான லேயாள் ஆசிரியை கர்த்தரின் இராஜ்யத்திற்குள்ளாக எடுத்துக்கொள்ளப்பட்டாள். அப்பள்ளியின் முதல் இந்திய பெண் ஆசிரியை நல்லாசிரியையாக சிறிது காலம் பணியாற்றி நிரந்தரமாக விடைகொடுத்துச் சென்றார்கள்.

மிஷனெரிகளாயும் ஆசிரியர்களாயும் பணியாற்றியவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். நம் திருச்சபைகளின் வரலாற்றை திருப்பிப்பார்க்கும் போது அவர்களின் ஆசிரியப்பணியும், ஊழியமுமே இன்று நம் ஆசீர்வாத வாழ்வின் அஸ்திபாரங்களாக இருக்கின்றது. தங்கள் உயிரினையும் கொடுத்து ஆரம்பித்து வைத்த மிஷன் பள்ளிக்கூடங்கள் இன்று பல



மூடுவிழாக்களை கண்டுவிட்டது. யாரையும் குறைகூறுவதற்கு இடமில்லை. சமுதாயத்திலும், வாழ்க்கைமுறையிலும், ஆங்கில மோகத்தினாலும் இன்று பல பள்ளிகளை இழந்து நிற்கின்றோம். எஞ்சியுள்ள பள்ளிக்கூடங்களையாவது காப்பாற்றி எதிர்வரும் சந்ததிகளுக்கு கொடுப்பது இத்தலைமுறையினரின் கடமையாகும்.

PC:THE MARY ELLIOTT TUXFORD GIRLS'SCHOOL





மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |




பேரா. குட்டி ஜஸ்கர்
போப் கல்லூரி, சாயர்புரம்

# கிறிஸ்தவ கீர்த்தனைகள் தொகுப்பட்ட வரலாறு

இறைவழிபாட்டில் கீர்த்தனைகளின் பங்கு இன்றியமையாதது. கீர்த்தனைகளின் மூலம் இறைவனுடைய மாட்சியை வெளிப்படுத்தி நாம் மன அமைதியையும் இறை ஆசியையும் பெற்றுக் கொள்ளலாம். கீர்த்தி இதன் பொருள் **"புகழ்"** என்பது, கீர்த்தனை என்பது **"புகழ் பாடுதலை"**க் குறிக்கும்.

கொன்சாலொ பெர்னாண்டசு என்பவர் கிறிஸ்தவத் தமிழ் இசைப்பாடல்களை 1612 இல் மதுரையில் ஒரு தமிழ் புலவரைக் கொண்டு எழுதச் செய்தார். பின்னர் 1644-ஆம் ஆண்டு புகழ் பெற்ற கத்தோலிக்க போதகர் இராபர்ட்-டி-நெபிலி ஒரு நாடக ஆசிரியர் மூலம் கிறிஸ்தவ இசைப்பாடல்களை இயற்றச் செய்தார்.

கி.பி. 1706 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் தேதி (09.07.1706) தமிழகம் வந்த முதல் லூத்தரன் மிஷனெரியான சீகன்பால்க் ஐயரவர்கள், திருமறை பிரசங்க புத்தகங்கள், வேத சரித்திரம், திருச்சபை சரித்திரம் ஜெபபுத்தகங்கள், அகராதி, இலக்கணம் இவைகளை தமிழில் மொழிபெயர்த்தும் இயற்றியும் தந்தார். அதே சமயத்தில் ஜெர்மன் மொழியிலிருந்து ஞானப்பாட்டுகள் சிலவற்றையும் தமிழில் மொழிபெயர்த்து ஒரு புத்தகமாக அச்சிட்டார். இப்பாடல்கள் லூத்தரன் திருச்சபையில் பாடப்பட்டு வந்தன. 1774-ல் பிறந்த தந்தை வேதநாயகம் சாஸ்திரியார் தான் முதன் முதலில் கிறிஸ்தவ கீர்த்தனைகளை பாடினார் என்று சொல்லலாம். அவரது நூல்கள் 136ல் **"ஞானகீர்த்தனம்"** என்பது ஒரு கீர்த்தனை நூலாகும். இதில் 400 கீர்த்தனைகள் உள்ளன. நமது கிறிஸ்தவ கீர்த்தனை புத்தகத்தில் அவரது கீர்த்தனைகள் மொத்தம் 75 கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. அவருக்கு பின் வந்த மாயூரம் வேதநாயகம் பிள்ளையார் 1878ல் **"சர்வசமய சமரசக் கீர்த்தனைகள்"** என்ற தலைப்பில் சுமார் 200 இன்னிசை கீர்த்தனைகள் அடங்கிய புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அதற்கு பின் கிறிஸ்தவக் கம்பன் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட ஹென்றி ஆல்பட் கிருட்டினபிள்ளை என்பவர் சுமார் 14 நூல்கள் எழுதியுள்ளார். அவைகளில் சில கீர்த்தனைகள் நமது கீர்த்தனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

ஞானப்பாட்டு என்று அழைக்கப்படும் பாமாலைகள் மட்டும் சபைகளில் பாடப்பட்டு வந்ததால் கிராமச் சபைகளில் அவைகளை பாடுவது கடினமாக இருந்தது. அதனால் ஆங்காங்கே நாம் மேலே பார்த்த புலவர்களின் கீர்த்தனைகளை திருச்சபையார் பாடலானார்கள் இவைகளை ஒழுங்குபடுத்தினால் நலமாயிருக்கும் என்று எண்ணிய கிறிஸ்தவ நூல் வெளியீட்டுச் சங்கத்தார் (C.L.S.) மறைதிரு. வெப் ஐயரவர்களால் தொகுத்து தரப்பட்ட கீர்த்தனைகளை **"கிறிஸ்தவ கீர்த்தனை"** என்ற தலைப்பில் முதன் முதலாக 1853 இல் அச்சிட்டு திருச்சபைக்கு அளித்தார்கள். இதில் குறைந்த எண்ணிக்கையுள்ள கீர்த்தனைகள் இடம் பெற்றன. 1870 ஆம் ஆண்டு மறைதிரு. வாஷ்பர்ன் என்ற ஐயரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினால் முதல் புத்தகம் திருத்தப்பட்டு மேலும் சில கீர்த்தனைகளை சேர்த்து 1870 ஆம் ஆண்டிலேயே பதிப்பிக்கப்பட்டு வெளியிட்டார்கள். அதன் பிறகு மறைதிரு சாண்ட்லர் ஐயரவர்களின் முயற்சியால் அநேக புதிய கீர்த்தனைகள் சேர்க்கப்பட்டு மீண்டும் பதிப்பாக வெளிவந்தது. இக்கீர்த்தனைகளை எல்லா திருச்சபைகளிலும் பயன்படுத்தலானார்கள்.

1922 ஆம் ஆண்டில் சென்னை கிறிஸ்தவ நூல் சங்கம் கீர்த்தனை நூலின் நான்காம் பதிப்பை ஏற்படுத்துமாறு ஒரு புதிய கழகம் நியமித்தது. அக்கழகம் 1926 ஆம் ஆண்டில் நான்காம் பதிப்பை வெளியிட்டது. 1943 ஆம் ஆண்டில் லூத்தரன் சபையின் தலைவர்கள் தங்கள் சபைகளில் பாட வேண்டிய சில கீர்த்தனைகளைச் சேர்க்கும்படி (C.L.S.) சங்கத்திற்கு தெரிவித்தார்கள். அப்போது (C.L.S.) சங்கம் கீர்த்தனை நூலின் ஒரு புதிய பதிப்பை வெளியிடுமாறு எல்லா சபைகளிலிருந்தும் ஒரு பொது கழகத்தை நியமித்தது. இக்கழகம் 1943 ஆம் ஆண்டில் முதலில் கூடிக் கீர்த்தனை நூலில் அதிக மாறுதல் செய்வது நலமல்ல என்றும் லூத்தரன் சபையாருக்கு வேண்டிய 35 கீர்த்தனைகளைச் சேர்க்க வேண்டுமென்றும் தீர்மானித்தது. அப்போது உலகப் போரினால் உண்டான நெருக்கடியால் புதிய நூல் அச்சிடப்படாமல் வேலை நின்றது.

உலகப்போர் முடிந்தபின் 1947 ஆம் ஆண்டில் (C.L.S.) சங்கம் 10 பேர் கொண்ட ஓர் குழு அமைத்து அதன் தலைவராக குன்னூர் மிஷனெரியான H.A. பாப்லி என்பவரை நியமித்தார்கள்.

ஆகவே 1950 ஆண்டு ஐந்தாம் பதிப்பு வெளியிடப்பட்டது. இதில் லூத்தரன் சபை பாடல்கள் 35 திருப்பத்தூர் "ஆசிரம பாமாலை" மறைதிரு. J.A. சாமுவேல் இயற்றிய "கைப்பிரதி பாட்டுகள்" கருணாகரபுரியில் அச்சிடப்பட்ட "கிறிஸ்தவ கீர்த்தனை மாலை" 'திருமறையூர் கீதங்கள்" S.மாசில்லாமணி இயற்றிய கிறிஸ்தவ இன்னிசைப்பாடல்கள் முதலியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட கீர்த்தனைகள் இப்பகுதியில் இடம் பெற்று 400 கீர்த்தனைகள் கொண்ட ஓர் பெரிய கீர்த்தனை புத்தகமாக வெளியிடப்பட்டது. 87 ஆக்கியொன்களின் கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன.

1987 ஆம் ஆண்டு இருபத்தி நான்காம் பதிப்பு வெளியிடப்பட்டது. 1988 இல் பேராசிரியர் பொ.அ.சத்திய சாட்சி அவர்களைத் தலைவராகவும் அருள்திரு. டாக்டர். திரு. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களைக் கூட்டுனராகவும் கொண்ட 25 பேர் கொண்ட ஓர் குழு அமைத்து புத்தகத்தில் இதற்கு முந்தின பதிப்பில் இருந்த 65 கீர்த்தனைகளை நீக்கி விட்டனர். குறிப்பாக வேதநாயகம் சாஸ்திரியாரின் 17கீர்த்தனைகள் நீக்கப்பட்டுள்ளன.

கீர்த்தனைகளின் அநேக பதங்களை மாற்றிவிட்டனர். சரணங்களை மாற்றி அமைத்துள்ளனர். "புத்தெழுச்சிப்பாடல்கள்" என்ற தலைப்பில் 29 ஆசிரியர்களால் எழுதப்பட்ட 113 கீர்த்தனைகள் சேர்க்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் மூன்று வழிபாட்டு முறைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆக இப்பதிப்பில் மொத்தம் 116 ஆசிரியர்களால் எழுதப்பட்ட 448 கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. 1988 முதல் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும்) இந்த கீர்த்தனைப் புத்தகம் அச்சிடப்பட்டு வருகின்றது. இனிவரப்போகும் காலத்தில் எத்தனை மாறுதல்களை நமது கீர்த்தனைப் புத்தகம் பெறப்போகிறதோ!

ஒரே இராகத்தில் அமைந்த கிறிஸ்தவக் கீர்த்தனைகளின் பட்டியல்.

ஒவ்வொரு இராக தலைப்புக்கும் இடையே உள்ள கீர்த்தனைகள் அனைத்தும் ஒரே இராகத்தில் உள்ளவை. ஏதேனும் ஒரு கீர்த்தனை அறிந்தால் போதும் அந்தந்த பகுதியில் உள்ள பாடல்கள் அனைத்தும் அறிந்த ஒன்றாகிவிடும் சபையார் இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

- சங்கராபரணம்
    - 2 திரிமுதல் கிருபாசனனே
    - 6 சீர்மிகு வானபுவிதேவா
- பியாகு
    - 17 கண்களை எறெடுப்பேன்
    - 360 எந்நாளுமே துதிப்பாய்
- காம்போதி
    - 18 பாடித்துதி மனமே
    - 396 கிறிஸ்தவ இல்லறமே
- தன்யாசி
    - 28 நன்றி செலுத்துவாயே
    - 104 ஓகோ இயேசுவின்
    - 163 எத்தனை திரள் என்
    - 129 காலத்தின் அருமையை
    - 313 அருட்கடலே வரந்தரவிது
- சங்கராபரணம்
    - 34 ஆர் இவர் ஆராரோ
    - 107 சுப ஜெய மங்களமே
    - 336 தோத்திரப் பாத்திரனே
    - 337 ஐயரே நீர் தங்கும்
    - 377 அனுக்கிர வார்த்தையோடே
- யமுனா கல்யாணி
    - 42 பவனி செல்கிறார் ராஜா
    - 193 ஆசையாகினேன் கோவே
- சங்கராபரணம்
    - 9 இந்நாளில் இயேசுநாதர்
    - 293 ஆ வாரும் நாமெல்லாரும் கூடி
- கரஹரப்பிரியா
    - 71 வரவேணும் எனதரசே
    - 119 வரவேணும் பரனாவியே
- ஆனந்தபைரவி
    - 78 ஆத்துமமே என் முழு உள்ளமே
    - 348 மணவாழ்வு புவி
- எதுகுலகாம்போதி
    - 80 ஏசுவையே துதி செய்
    - 183 கிருபை புரிந்தெனை ஆள்
- சூரியகாந்தம்
    - 81 துதி தங்கிய பரமண்டல
    - 128 விசுவாசியின் காதில்பட
- பைரவி
    - 85 தோத்திரம் செய்வேனே
    - 146 வேளை இது சபையே



242 ஆ! இன்பக் காலமல்லோ

- 263 பொக்கிஷம் சேர்த்திடுங்கள்
- ஹரிகாம்போதி
- 94 இயேசுவின் நாமமே
- 243 சத்திய வேதத்தை
- சங்கராபரணம்
- 98 சுந்தரப்பரமதேவ
- 373 பூமியின் குடிகளே
- மணிரங்கு
- 121 தீயமனதை மாற்ற
- 167 இரங்கும் இரங்கும்
- 367 வாரும் எமது வறுமை
- சங்கராபரணம்
- 148 குணப்படுபாவி தேவ
- 252 பாக்கியர் இன்னார்
- 306 கர்த்தரின் பந்தியில் வா
- ஆனந்த பைரவி
- 131 இயேசு நாமம் ஒன்றை
- 154 பாதகன் என்வினை தீர் ஐயா
- 198 தேவனே நான் உமதண்டையில்
- 257 புத்தியாய் நடந்து வாருங்கள்
- 305 சிந்தை செய்யும் என்னில்
- 349 இந்த மங்களம் செழிக்கவே
- 364 இன்னமும் நாம் இயேசு
- 376 அந்தகார பூமி இதையா
- முகாரி
- 166 ஐயையா நான் பாவி
- 185 ஐயையா நான் வந்தேன்
- 262 எது வேண்டும் சொல் நேசனே
- நாதநாமக்கிரியை
- 215 இயேசு நான் நிற்கும்
- 239 ஜெபசிந்தை எனில் தாரும்
- 296 சரணம் நம்பினேன்
- பியாகு
- 229 கிஞ்சிதமும் நெஞ்சே
- 269 ஆத்தும ஆதாயம்
- 273 ஆண்டவர் பங்காகவே
-

- கமாஸ்
- 140 அந்த நாள் பாக்கியநாள்
- 326 தேவலோகமதில்
- பியாகு
- 272 வீராதிவீரர் இயேசு
- 388 யூத ராஜசிங்கம் உயிர்த்
- காம்போதி
- 181 இயேசுவே கிருபாசன பதியே
- 281 வான நகரத்தின் மேன்மை
- 302 ஞானஸ்நானமா ஞானதிரவியமே
- காபி
- 117 ஆவியை அருளுமே சுவாமி
- 241 ஏற்றுக் கொண்டருளுமே தேவா
- 304 பரிசுத்தாவி நீர் வாரும்
- கேதரா கௌளம்
- 39 பணிந்து நடந்து கொண்டாரே
- 45 புண்ணியன் இவர் யாரோ
- 257 புத்தியாய் நடந்து வாருங்கள்
- 353 ஆறுதல் அடைமனமே
- உசேனி
- 143 வேறு ஜென்மம் வேணும்
- 201 பாதம் ஒன்றே வேணும்
- 253 நித்தம் முயல் மனமே
- கமாஸ்
- 187 சித்தம் கலங்காதே பிள்ளையே
- 343 நிச்சயம் செய்குவோம்
- பியாகு
- 68 எழுந்தார் இறைவன்
- 82 இவரே பெருமான்
- அமிர்த கல்யாணி
- 08 எத்தனை நாவால் துதிப்பேன்
- 116 ஆவியை மழை போலே
- ஹரிகாம்போதி
- 149 ஓகோ பாவத்தினை
- 150 மகனே உன் நெஞ்சே



தமிழ் நாட்டின் தனிப்பெரும் நாவலாசிரியர்

அ.மாதவையா அவர்களின்

# கிளாரிந்தா

தமிழ்நாட்டில் வெளி வந்த முதல் வரலாற்று நாவல்

## தொடர் –18

**நாமொன்று நினைக்க ...**

கிளாவிருந்தாவைச் சந்தித்து வந்ததை சோனாபாய் கணவனிடம் தெரிவித்தாள்.

ஒரு பதிவிரதையின் லட்சணம் அவளிடம் இல்லை. லௌகிக சிந்தையும் சிற்றின்ப நாட்டமுமாய் இருக்கிறாள். அவளைத் திருத்த முடியாது. எனக்கு வெறுப்பாகிவிட்டது. இவளைப் போலொத்தவர்கள் சதியாவது இதுவரை சதியாகியிருக்கும் ஆயிரக்கணக்கான பதிவிரதைகளுக்குப் பெரிய அவமானமாகும்' என்றாள். அமாத்யா சாதுபோல, 'யாரைப்பற்றியும் அவ்வளவு கடுமையாகத் தீர்ப்பு செய்துவிடக்கூடாது. ஒரு வேளை தீர ஆலோசனை செய்ததின்பேரில் அவள் இனிமேலும் மனம் மாறலாம். உயிருள்ளவரை நம்பிக்கையும் உண்டு' என்றார். 'நீங்கள் சொல்லுவதுபோல அவள் மனம் மாறினால் அது பெரிய அதிசயம் தான்' என்று தோள்களைக் குலுக்கிச் சொல்லி விட்டு கோவிலுக்குச் செல்ல ஆயத்தமானாள் சோனாபாய்.

அமாத்யா உடனேயே கமலாபாயைக் கூப்பிட்டு அனுப்பினார். திவான் இறந்ததும் கிளாவிருந்தாவை எப்படிச் சதியாக்குவது என்பதுபற்றி இருவரும் பல யோசனைகள் செய்தனர். கமலா, 'இந்தச் சங்கடமெல்லாம் எதற்கு? அத்திம்பேர் இறந்ததும் நானே அவள் துணியில் தீயை வைத்து விடுகிறேன். அவளுக்கு அது வேண்டியதுதான். விபத்து என்று சொல்லிவிட்டால் போச்சு' என்றாள்.

அமாத்யா ஆலோசித்த வண்ணம், 'ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களால் அது சரிப்பட்டு வராது. சந்தேகத்துக்கு இடம் உண்டாகும். இல்லாத வம்புகளை எல்லாம் கிளப்புவார்கள். எப்படியும் வேலையாட்களுக்கு உண்மை தெரிந்து விடும். அதை வைத்துக்கொண்டு அவர்கள் நம்மை ஆட்டி வைப்பார்கள். சதியாவதினால் குடும்பப் பேருக்கு ஏற்படும் மகத்துவத்தையும் இழந்துவிடுவோம். அவள் சதியாகத்தான் ஆகவேண்டும்' ஆக்கவேண்டும்' என்றார். கமலாபாய் பேச்சை மாற்றி 'ஆனால் முதலாவது பட்டேரிக்கு ஆள் அனுப்பி அவன் செய்யும் மாற்று வேலையினால் அத்திம் பேரைப் பிழைக்க வைக்க முடியாதா என்பதை விசாரிக்க வேண்டும். இன்று அவர் மிக மோசமாகத்தான் இருக்கிறார்' என்றாள்.

அமாத்யா சற்று நேரம் ஆலோசித்தவராக 'ஆமாம், அவரைப் பிழைக்கவைப்பதைத்தான் நாம் முதலில் கவனிக்க வேண்டும். பட்டேரியை வரவழைக்கிறேன்' என்றார். போகுமுன் 'திவான் நிலை கவலைக்கிடமாக இருக்கிறதென்பதை உறவினர் யாருக்கும் தெரிவிக்கவேண்டாம். இப்பொழுது வீட்டில் அந்நியர் நடமாட்டமே இருக்கக்கூடாது' என்றார். கமலாபாயும் அப்படியே செய்வதாகச் சொல்லி விட்டு, நோயாளியின் அறைக்குச் சென்றாள்.

ஒரு மணிநேரம் கழித்து அமாத்யா தாழிட்ட தம் அறைக்குள் இருந்து பட்டேரியிடம் பேசிக்கொண்டிருந்தார்.

நோயாளியின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. உன் தாயத்தினால் பலன் எதுவும் இல்லை.'

'எதிராளி சும்மாவா இருப்பான்? அவனும் ஆபத்தான சூனிய வேலையெல்லாம் செய்துகொண்டிருப்பானே? அந்தக் கைம்பெண்

அம்மாவை எங்கே? ஆஞ்சநேயர் என்ன சொல்லுகிறார் என்று கேட்கவேண்டும்' என்றான்.

அமாத்யா பொறுமை இழந்தவராக 'உஷ் அந்தப் பேச் செல்லாம் வேண்டாம். பெண்களிடமும் முட்டாள்களிடமும் அந்தச் சரக்கை வைத்துக்கொள். நீ விவரம் தெரிந்த மனிதன். உன் தொழில் எளிதானது அல்ல. முட்டாள்கள் செய்யக்கூடிய தொழில் அல்ல என்று எனக்குத் தெரியும். பீடிகை இல்லாமல் விஷயத்துக்கு வருவோம். நான் யாரென்பது உனக்குத் தெரியும் அல்லவா?' 'தெரியும் எசமான்.' 'நோயாளி யாரென்பதும் தெரியும்?' 'தெரியும் எசமான்.'

அவர் சாகுந்தருவாயில் இருக்கிறார் என்பது தெரியுமா?' 'தெரியும் எசமான். இரண்டு இரும்பு ஆணியை வயத்திலே அறைஞ்ச பிறகும் . . .' அமாத்யா முற்றிலும் பொறுமையை இழந்து, 'முட்டாள், நீ ஒரு போலி மருத்துவன். அதைவிடச் சற்று உயர்வாக உன்னை மதிப்பிட்டிருந்தேன். நான் மனிதரை எடைபோடுவதில் தவறுவதே இல்லை. இந்தச் சால வித்தையை எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு காரியத்துக்கு வருகிறாயா?' என்று கேட்டார். 'சரி எசமான், எனக்கு புரியுது எசமான்.' 'என் தமையனார் மோசமான நிலையில் இருப்பது உனக்குத் தெரியும் அல்லவா?' 'ஆமாம் எசமான் உயிர் ஊசலாடிக் கிட்டிருக்குது, எந்த நிமிடமும் போய்விடுவார்.'

'நீ ஆட்களை மயக்க நிலைக்கு உட்படுத்தி உன் வயப்படுத்துவதில் கெட்டிக்காரனல்லவா?' பட்டேரி தயங்கினான். 'பெண்களிடமாவது அதை எளிதில் செய்வாயல்லவா?'

'செய்வேன் எசமான். பெண்களை இலேசில் வயப்படுத்தி விடுவேன்.'

'வெகு தொலைவிலுள்ள மலையாளத்திலிருந்து வந்திருக்கிறாய். பாமரர்களிடம் உனக்கு நல்ல பெயர் இருக்கிறது. இருந்தும் உன் வருமானம் மாதம் இருபது முப்பதுக்குமேல் போவதில்லை அல்லவா?' 'எசமானுக்கு எல்லாம் தெரிகிறது.' ' பணம் தான் உன் நோக்கம் அல்லவா?' 'நான் ஏழை எசமான். என் குடும்பம் பெரிசு. நான் சம்பாதித்து அனுப்புவதை வைத்துத்தான் அவர்கள் அங்கே பிழைக்கவேணும்.'

'ஓர் இளம் பெண்ணை முழுவதுமாக உன் வயப்படுத்தி மயக்க நிலையில் நீ சொல்வதற்கெல்லாம் அவளை உடன்பட வைக்க எவ்வளவு நேரம் எடுப்பாய்?' "அது பெண்ணைப் பொறுத்து இருக்கிறது. வேலை வாய்ப்புகளையும் பொறுத்தது."

"நடைமுறைக்கு ஒவ்வாத விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கும் ஒரு முட்டாள் பெண். ஏற்கெனவே நரம்புத் தளர்ச்சி உள்ளவள்." 'அவளும் அறிந்து ஒத்துழைத்தால் அல்லது அமைதியாகப் பணிந்துபோனால் சில நிமிடங்களில் முடித்துவிடுவேன், எசமான். ஆனால் அவள் எதிர்த்தால் ஓரிரண்டு தடவைகளுக்குமேல் உட்காரவேண்டியது வரும்.' 'ஓர் ஆயிரம் உனக்குப் போதுமா?' ' எதற்கு எசமான்?' 'ஓர் பெண்ணை வயப்படுத்தி அவளை நம் சொற்படி செய்யச் சொல்வதற்கு.'

வக்கிரமும் சூதும் நிறைந்த அமாத்யாவின் முகத்தை பட்டேரி சிறிது நேரம் மௌனமாகக் கவனித்துப் பார்த்தான். ஆச்சரியமும் அடைந்தவன் போல் தோன்றினான். உணர்ச்சிக்கு இடம் கொடுக்காத மன உரம் வாய்ந்த இவரும்கூட அந்தப் பலவீனத்துக்கு அடிமைப்பட்டவர்தானா என்று நினைத்தவன் போல் தோன்றிற்று. பின் 'என்ன செய்யச் சொல்வதற்கு, எசமான்?' என்று கேட்டான். 'நான் செய்யச் சொல்லுவதை உன் மூலமாகத் தான் அவள் செய்யவேண்டும்.' 'எசமான் நான் விவரம் தெரிந்தவன் என்று சிறிது முந்தி தான் சொன்னீர்கள். நான் பதில் சொல்லவேண்டுமானால் எதற்கு என்று தெரியவேண்டும்.'

இப்பொழுது அமாத்யா தன் பங்குக்கு மௌனமானார். நீண்ட அமைதிக்குப் பிறகு தயங்கித் தயங்கி வார்த்தைகளைத் தேடி நிறுத்திச் சொல்லலானார்.

பதிவிரதையான என் மதனி கணவன் இறந்தபிறகு உலகத்தில் என்ன இருக்கிறது என்று வெறுத்தவளாய் சதியாகவேண்டும் என்று விரும்புகிறாள். பக்தி சிரத்தையுள்ள பிராமண மனைவிக்குக் குழந்தைகளும் இல்லாதபோது, இங்கே அமாத்யா தவறாகச் சொல்லிவிட்டோமே என்று உதட்டைக் கடித்தார். பின் தொடர்ந்து இந்த உலகத்திலும் என்ன தான் இருக்கிறது?' என்றார்.

அதில் என்ன சந்தேகம் வந்தது என்பதுபோல பட்டேரி 'ஒன்றுமில்லை எசமான்' என்றான். அமாத்யா அவனைக் கூர்ந்து நோக்கியதும் பதிலுக்குக் கள்ளமில்லாமல் அவரைப் பார்த்து விழித்தான்.

'ஆனால் இளமையாயிருப்பதாலும், வாழத்துடிக்கும் வயதாயிருப்பதாலும், கடைசி நிமிடத்தில் உறுதி இழந்து விடுவோமோ என்று பயப்படுகிறாள்.'

யாருக்குத்தான் சாக மனசு வரும் எசமான் அதுவும் சிறு வயதில்? என் மகள் ஒருத்தி பதினெட்டு வயதில் தீ விபத்தில் இறந்துவிட்டாள். துணியில் தீப்பிடித்து உடலெல்லாம் ரொம்பவும் எரிந்துவிட்டது.' அமாத்யா துணுக்குற்றார். ஆனால் அடுத்த வினாடி சுதாரித்துக் கொண்டார். 'என் பார்வதி இரண்டு மூன்று நாட்கள் தீக் காயங்களால் அவஸ்தைப்பட்டாள். உடலெல்லாம் வெந்து, பிழைத்தாலும் பார்க்க மிக அசிங்கமாக இருப்போம் என்ற நிலையில்கூட, அவள் சாக விரும்பவில்லை, எசமான். வாழ்க்கை இனிமையானது, அதுவும் இளைஞர்களுக்கு மிகவும் இனிமையானது என்றான்.

அமாத்யா மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்து மௌனமானார். பட்டேரியும் ஒன்றும் பேசவில்லை. பின் அமாத்யா, 'ஆனால் இந்தப் பெண், என் மதனி, விதவையாக வாழ விரும்பவே இல்லை. மோட்சம் அடைவதிலும் ஆர்வமாக இருக்கிறாள். நல்ல பண்புகளும் உத்தம குணங்களும் உள்ள பதிவிரதை யாதலால் . . ."

'நீங்கள் முன்னால் சொன்னதுபோல் நரம்புத் தளர்ச்சியும், நடைமுறைக்குச் சரிப்படாத விஷயங்களையும் பேசும் முட்டாள் பெண் அல்ல போலும். எனக்கு விளங்குகிறது எசமான். என்னால் முடியாது எசமான்.'

'நீ சம்மதிக்காவிட்டால் விஷயத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன். அவளுடைய உத்தம நோக்கத்தை நிறைவேற்றிவைப்பதில் நீ உதவி செய்யவேண்டும் என்பது தான் என் விருப்பம்.'

'இல்லை எசமான். நான் ஏழைதான். ஆனால் எசமானுக்கு விளங்கும்.' 'உம், நான் இம்மாதிரி தவறு இதற்கு முன்னால் செய்ததே இல்லை. சரி இதைப்பற்றி வெளியில் சொல்லக்கூடாது, தெரியுமா?' 'சொல்லுவேனா? எசமான்.' 'இந்தா, இதை வைத்துக்கொள். நாளையிலிருந்து என் தமையனாரின் வீட்டுக்கு தினமும் வந்து அவர் சீக்கிரம் குணமடைவதற்காக உன் மாந்திரீகத் தொழிலைச் செய்து விட்டுப் போ. பெண்கள் அப்படி விரும்புகிறார்கள்.'

‘சரி எசமான். நீங்கள் என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்’ என்று சொல்லிவிட்டு, அமாத்யா கொடுத்த ஐந்து தங்க மோகராக்களையும் வேட்டியில் முடிந்துகொண்டு வெளியே கிளம்பினான். அவன் மடியில் இருந்த பணத்தைப் போலவே அவன் வியப்பும் அதிகமாக இருந்தது.

பட்டேரி சென்றதும் அமாத்யா வேலைக்காரனை அழைத்து அடுத்த தெருவில் வசித்துவரும் யூனானி வைத்தியரான ஹக்கிம் பக்கீர் மஹம்மது அலி சாஹிப்பைக் கூட்டிக்கொண்டு வரச்சொன்னார். வேலைக்காரன் சென்றதும் அமாத்யா மாந்திரீகன் விஷயத்தில் தாம் போட்டுவிட்ட தப்புக் கணக்குக்காகத் தம்மையே மிகத் தீவிரமாக நொந்துகொண்டார். தன்மீதே அவருக்கு வெறுப்பும் கோபமும் வந்தது. வயதான ஹக்கிம் வந்தார். நரைத்த தாடி தொங்கத் தொங்க முதுபெருங்கிழவர்போல் தோற்றம் அளித்தார். சில நிமிடங்கள் மாத்திரமே பேசிக்கொண்டிருந்துவிட்டு, ஒரே ஒரு வெள்ளிப்பணத்தைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்று மருந்து அனுப்புவதாக வாக்களித்துவிட்டுப் புறப்பட்டார்.



அவர் சென்றதும் கமலாபாய் அழுது சிவந்த முகத்துடன் உள்ளே நுழைந்து:

‘அத்திம்பேர் இறந்துவிட்டார்’ என்றாள். ஆனால் இன்னும் கதறி அழாமல் அடக்கியே அழுதாள். அமாத்யாவின் துக்கம் ரத்தினச் சுருக்கமாக இருந்தது. அவரது தந்திரக் கண்களிலிருந்து ஓரிரண்டு துளிக் கண்ணீர் வடிந்தது. இரத்த பாசம் விடாது அல்லவா! அதை உடனேயே துடைத்துக்கொண்டு, அதற்குமேல் வெளிப்படையாக ஒன்றும் காட்டிக்கொள்ளாமல் நாம் நமது திட்டங்களை இனிமேல் தான் நடத்தியாகவேண்டும். நீ இப்பொழுது அழுது அரற்றிக்கொண்டு இருக்க முடியாது. என்னைப்பார், எனக்கு மாத்திரம் துக்கம் இல்லையா?’ என்றார். கமலாபாயும் அழுகையை அடக்கிக்கொண்டாள். ‘அவள் எங்கே இருக்கிறாள்?’ என்றார் அமாத்யா. ‘அவள் அறையில், அவளுக்கு இன்னும் தெரியாது. அறையை வெளியே தாழிட்டிருக்கிறேன்’ என்றாள். ‘வேலையாட்கள்?’ ‘இன்னும் யாருக்குமே தெரியாது. குடிப்பதற்கு ஒரு மடக்கு ஷர்பத் கேட்டார். நான் அதை அவர் வாயில் ஊற்றிக்கொண்டிருக்கும்போதே தலையை நிமிர்த்தினார். அப்படியே தலை சரிந்துவிட்டது. எனக்குக் கதறவேண்டும் போல் இருந்தது. ஆனால் நமது திட்டம் நினைவுக்கு வரவே அடக்கிக்கொண்டேன். அவருடைய கண்களை மூடிவிட்டு, உடலையும் போர்வையால் போர்த்திவிட்டு கதவைப் பூட்டிக் கொண்டு இங்கே வந்துவிட்டேன்.’சாதாரணமாகப் பேசிக் கொண்டே வந்தவள் துக்கம் தாளாமல் பிலாக்கணம் தொடங்கிவிட்டாள், ‘ஐயோ அவர் போயிட்டார். என் அத்திம்பேர் போயிட்டார். அந்தத் துக்கிரிக் கழுதை அவரைக் கொன்னூட்டா. இந்த உலகத்தில் என்னத தனியாய்த் தவிக்க விட்டுவிட்டு அவர் போயிட்டார்.’

எங்கே சத்தமாக ஒப்பாரி வைத்துவிடப்போகிறாளோ என்று பயந்து அமாத்யா தம் கையால் அவள் வாயைப் பொத்தினார். ‘அசடு மாதிரி நடந்துகொள்கிறாயே. இவ்வளவு சமயோசிதமாகவும் முன் யோசனையுடனும் நடந்துகொண்டிருக்கிறாயே என்று இப்பொழுதுதான் உன்னை மனசுக்குள் பாராட்டிக்கொண்டிருந்தேன். நானும் உடன்பிறந்த தமையனை இழந்தவன் தானே. அவர் நினைவுக்காக நாம் வாங்கவேண்டிய பழியை நினைத்துக்கொள். இன்னும் சிறிது நேரத்துக்கு அடக்கிக்கொள். இப்பொழுது மணி ஆறு ஆகிறது. அவர் மாலை வேளையில் இறந்தது நல்லதாகப் போயிற்று. வீடும் ஆற்றுக்கு அருகிலேயே இருக்கிறது. ஆனால் இரு. அவர் நிச்சயமாக இறந்துவிட்டாரா? ஒருவேளை மயக்கமாகி இருக்கிறாரோ என்னமோ?’ என்றார்.

‘நிச்சயமாக இறந்துவிட்டார். வருவதற்கு முன் சிறிது நேரம் அங்கேயே அழுதுகொண்டு நின்றிருந்தேன். மயக்கமாக இருக்கலாம் என்று நினைத்து நானும் கவனித்துப்பார்த்தேன். அவர் இறந்துவிட்டார்’ என்றாள். ‘சரி, இன்னும் இரண்டு மூன்று மணிநேரம் நாம் இதை இரகசியமாக வைத்திருக்கவேண்டும். சோனாபாய்க்குக்கூட தெரியவேண்டாம். ஒன்பது மணிக்குமேல் தான் தெரிவிக்க வேண்டும். அப்பொழுது நீ அழுதுகொள்ளலாம். ஆனால் இரவுவேளை ஆதலால் ரொம்பச் சத்தமிடவேண்டாம். அதற்கப்புறம் தான் புரோகிதருக்கும் நெருங்கிய உறவினருக்கும் சொல்லி அனுப்பவேண்டும். உனக்கு நம்பிக்கையான பணிப் பெண்கள் யாராவது இருக்கிறார்களா?’

‘கல்யாணி இருக்கிறாள். என்னை நம்புவதுபோலவே அவளை நம்பலாம். அவளுக்கும் கிளாவிருந்தாவைப் பிடிக்காது, ஆனால் வேறு காரணங்களுக்காக’ என்றாள்.

‘சரி, அவளை உதவிக்கு வைத்துக்கொள். இனி நான் சொல்வதைக் கவனமாகக் கேள்’ என்று தாழ்ந்த குரலில் என்னவோ படித்துப் படித்துச் சொன்னார்.

‘எல்லாவற்றையும் நினைவில் வைத்துக்கொள். நான் சொன்னபடியே செய்யவேண்டும். மற்றவற்றை நான் கவனித்துக் கொள்கிறேன்.’

முடிவாக ‘பழிவாங்கவேண்டும், மறந்துவிடாதே, நீ

இன்று இரவுகாட்டப்போகும் திறமையைப் பொறுத்துத்தான் நான் செய்யும் கைம்மாறு இருக்கும். தெரிந்ததா? பெண் சதியாக விருப்பம் தெரிவித்துவிட்டாள் என்று என் மனைவியிடம் சொல்லிவிட்டால் அவள் இதில் தலையிடமாட்டாள்.'

'என் வேலையைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்' கல்யாணி ஒத்தாசை செய்தால் உங்களுக்குத் திருப்தியாகும் வகையில் முடித்துவிடுவேன்' என்றாள் கமலாபாய்.

'சரி, அப்படியானால் நீ இனி அண்ணா இருக்கும் அறையில் போய் இரு. வேறு யாரையும் அங்கு வரவிடாதே. ஒருவருக்கும் விஷயம் தெரியவும் வேண்டாம். நான் மருந்தை உன்னிடம் கொண்டுவந்து தருகிறேன். இந்தா, அந்தச் சாவிக் கொத்தைக் கொடுத்துவிட்டுப் போ. சில பத்திரங்களை எடுக்க வேண்டியதிருக்கிறது' என்று அவள் பதிலுக்குக் காத்திராமலே அவள் தங்கச் சங்கிலியில் கோர்த்து இடுப்பில் கொளுவியிருந்த சாவிக் கொத்தை உருவிக்கொண்டார்.

'எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கமலாபாய்' என்னுடைய சாவிகளும் அதில் இருக்கிறது' என்று குளறினாள். 'இருக்கட்டும், அதனாலென்ன? சரி இப்பொழுது எனக்கு வேலை இருக்கிறது. வீட்டில் மற்றவர்களுக்கு எப்பொழுது செய்தியை வெளியிடுவது என்று நான் வந்து உனக்குச் சொல்லுகிறேன். ஆனால் திரும்பவும் உன்னைத் தனிமையில் பார்த்து எல்லாவற்றையும் விளக்கிச் சொல்லிக்கொண்டிருப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்காது. அதனால் எல்லாவற்றையும் கவனமாக நினைவில் வைத்துக்கொள். இன்று இரவு உன் வேலைத் திறமையைப் பொறுத்தது தான் நான் பின்னால் உன்னைப் பராமரிப்பது. நீ கெட்டிக்காரி என்பது எனக்குத் தெரியாதா?' என்று ஊக்குவிக்கும் முறையில் சிரித்தவண்ணம் சொல்லிக்கொண்டே மெதுவாக அவள் முதுகைத் தொட்டு கதவுப்புறம் கொண்டுவந்தார்.

மறுபேச்சுப் பேசாமல் கமலாபாய் வெளியே சென்றாள். தன்வினை தன்னைச் சுடத் தொடங்கிவிட்டது என்று அவள் உணர்ந்தாள். அவள் ஆசைநாயகனின் சடலம் இன்னும் இந்துவிடவில்லை. அதற்குள் அவளை இதுவரை நெருங்கத் துணிந்திராத இன்னொரு ஆடவன் மூன்று முறை யுடையவன் போல் தொட்டுத் தொட்டுப் பேசிவிட்டான். அவளுள் இன்னும் சிறிது எஞ்சியிருந்த பெண்மை கொதித்தது. பல ஆண்டுகளாக வீட்டில் ஓச்சிய ஏகாத பத்திய ஆட்சியின் செங்கோலாக விளங்கிய சாவிக் கொத்தும் பறிபோயிற்று. மதிப்பும் மரியாதையுமாக இருந்து அவள் அட்டகாசமாக ஆணைகள் பிறப்பித்து வந்த இடத்தில் இப்பொழுது அவளுக்கு உத்தரவுகள் இடப்பட்டன. இது தவிர்க்க முடியாதது என்பதையும் அவள் உணர்ந்தாள்.

**தெய்வமொன்று முடிக்கும்**

வசந்த காலத்துக் காலை ஒன்று புத்தம் புதிதாய் விடிந்தது. பஞ்சு மேகத்திரளுக்கு மறைவில் நின்று இளஞ்சூரியன் அவற்றின் விளிம்புக்கு ஜரிகைக்கரை கட்டினான். அந்தப் பெருமையில் அவை சக்கரவர்த்தியின் பவனியில் முன்னால் செல்லும் ஜாஜ்வல்யமான படை வீரர்களைப்போல் கிழக்கு அடிவானத்தில் பெருமித நடைபோட்டன. வல்லவனும் நல்லவனுமான அரசன் ஒருவன் வரவை எதிர்பார்ப்பதுபோல அந்தக் கிழக்கு வானம் மட்டுமில்லை, படைப்பு அனைத்துமே பூரிப்புமயமாக இருந்தது.


அப்பொழுது வெண்ணாற்றங்கரையின் உட்சரிவிலிருந்து திடீரென மேள ஓசையும் தெளிவில்லாத கூக்குரலும் கேட்டது. ஏதோ ஆண்களடங்கிய ஒரு சிறு கூட்டத்தினின்று கிளம்பிவந்த ஓசைபோன்று தோன்றியது. உற்றுக் கவனித்தால் ஒரு சிதையும் நடுவில் ஒரு சடலமும் இருப்பது தெரிந்தது. அக்கூட்டத்தில் அமாத்யா முக்கியமானவராகக் காணப்பட்டார். சிறுவன் ஒருவன் இடையில் ஈரத்துண்டுடன் தலையிலிருந்து முதுகில் தண்ணீர் சொட்டச் சொட்ட ஈமச் சடங்குகளைச் செய்து கொண்டிருந்தான். ஒரு வயோதிகப் புரோகிதர் அவனுக்கு உதவி செய்துகொண்டிருந்தார். நாலைந்து பெண்களும் அங்கே இருந்தார்கள். அவர்களில் ஒருத்தி கிளாவிருந்தாபாய். ஜாஜ்வல்யமான சிவப்புப் பட்டு உடுத்தி, கூந்தலில் மலரும், கழுத்தில் மாலையும் சூடி நின்றிருந்தாள். அவள் அகன்ற நெற்றியில் குங்குமமும், கண்களில் ஓர் அசாதாரண ஒளியும் இருந்தது, பையன் கட்டைகளில் தீ மூட்டவும் முதலில் புகைப் படலமும் பிறகு தீக்கொளுந்துகளும் எழும்பின.

அப்பொழுது, நகர்ப் புறத்திலிருந்து ஒரு வயதான பெண் இரைக்க இரைக்க, மிகுந்த பரபரப்புடன் ஆற்றங்கரையை நோக்கி ஓடிவந்தாள். ஓர் ஆங்கிலேய அதிகாரியும் ஆயுத பாணிகளான சிப்பாய்களும் பின்தொடர்ந்தனர். அவள் சாரதா. அவளைத் தொடர்ந்து வந்தவர்களால், அவளத்தனை வேகமாக ஓடிவர முடியவில்லை. சாரதா எல்லாருக்கும் முன்னால் ஆற்றங்கரை மேட்டை அடைந்தாள். அதன் உட்சரிவில், சுமார் ஐம்பது கஜ தூரத்தில் நின்றிருந்த கூட்டத்தையும் அவள் தான் முதலில் கண்டாள். மறுகணம் திடீரென 'சதி மாதாவுக்கு ஜே' என்று அமாத்யா முழங்க, அதைத் தொடர்ந்து பல குரல்களும் அப்படியே கோஷமிட்டன. மேளம் பலமாக இடைவிடாமல் கொட்டிற்று. கிளாவிருந்தாவை சிதை அருகே இழுத்து அலாக்காகத் தூக்கி, அதன் மேல் வைத்தார்கள். எல்லாக் கோஷங்களையும் கொட்டுச் சத்தத்தையும் மூழ்கடித்துக்கொண்டு ஓர் அபயக் கூக்குரல் வீறிட்டு எழுந்தது; சதி குதித்து மறுபுறமாய் விழுந்து தரையில் உருண்டாள். நாலைந்து பேர் கூச்சலிட்டுக்கொண்டே ஓடி வந்து நினைவிழந்திருந்த அவளை மீண்டும் எரியும் சிதையில் வைப்பதற்காகத் தூக்கினார்கள். அமாத்யாவும் கமலாபாயும் மிக மும்முரமாகச் செயல்பட்டார்கள்.

ஆனால் அதற்குள் சாரதாவைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேய அதிகாரியும் ஆட்களும் அவர்கள் நடுவில் பாயவும், ஆச்சரியத்திலும் பீதியிலும் கூட்டம் பின்வாங்கிக் கலைந்தது. அதிகாரி ஒரே பார்வையில் விஷயத்தைக் கிரகித்துக்கொண்டு சதியைத் தம் கரங்களில் தூக்கி எடுத்தார். சாரதா பின் தொடர, பாய்ந்து சென்று, வெளிச்சரிவில் காத்திருந்த இரு குதிரை பூட்டிய வண்டியை அடைந்தார். தாம் சுமந்துவந்த கருவூலத்துடனும், சாரதாவுடனும் வண்டியில் ஏறியதும், வண்டி மிக வேகமாகப் பறந்தது. இவை யாவும் எதிர்பாராமல் மிகத் துரிதமாக நடந்துவிட்டதால் மயானக் கூட்டத்தினர் திகைத்து நிற்பதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை.

அந்த வசந்த காலத்து இன்பமான காலைப்பொழுதில் ஆண்டவனின் திருவுளம் அதுவாக இருந்தது.

**தொடரும் ..**




அருள்திரு G.P. ராஜா
அருப்புக்கோட்டை

# அருப்புக்கோட்டை பகுதிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த மிஷனெரிகள்

**அருள்திரு. ஹோரேஸ் S. டெய்லர் மற்றும் அருள்திரு.ஜேம்ஸ் ஹேரிக் மிஷனெரிகள்**

மதுரை அமெரிக்கன் மிஷன் மிஷனெரி பணிக்கென்று அநேகர் இந்தியா வந்துள்ளார்கள். இன்று மதுரை இராமநாதபுரம் திருமண்டிலம் வளர்ந்து இருக்கு என்றால். அதற்கு மதுரை அமெரிக்கன் மிஷன் என்று சொன்னால் மிகையாகாது. 19 -ஆம் நூற்றாண்டுகளில் அமெரிக்காவிலிருந்து அநேக வாலிபர்கள் இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்தார்கள். அப்படி வருகின்ற வேளையில் மதுரை திருமங்கலம் பகுதியை மையமாகக் கொண்டு நற்செய்தி பணியை செய்ய வந்தவர்கள். இன்று தெற்கு வட்டகை மன்றம் பகுதியில் அருள்திரு.ஹோரேஸ் S.டெய்லர் மற்றும் அருள்திரு.ஜேம்ஸ் ஹேரிக் மிஷனரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

**அருள்திரு.ஹோரேஸ் S.டெய்லர்:**

அருள்திரு.ஹோரேஸ் S.டெய்லர் அவர்கள் தமிழகத்தில் 1844 ஆம் ஆண்டு அக்டோபர் 11-ம் தேதி தொடங்கினார். இவருடைய மனைவி திருமதி. மார்தா E.டெய்லர் அவர்களுடன் இணைந்து 26 ஆண்டுகள் மிஷனரி பணிகளை செய்தார்கள்.

**திருப்புவன ஊழியம்:**

அருள்திரு.எக்கார்டு ஆரம்பித்த ஊழியத்தை 1845 ல் டெய்லர் ஊழியத்தை தொடங்கினார். அங்கு தங்கி ஆலயத்தையும் விரிவாக்கம் செய்தார்.

**மண்டபசாலை ஊழியம்:**

இன்றைய தெற்கு வட்டகை மன்றம் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகயிருப்பது அருள்திரு.ஹோரேஸ் S.டெய்லர் செய்த ஊழியமாகும். மண்டபசாலையில் 1850 ஆம் ஆண்டு தொடங்கிய டெய்லரின் ஊழியம் நல்ல வளர்ச்சி பெற்றது. 1851 ஆம் ஆண்டு ஆண்டு அறிக்கையில் மண்டபசாலையின் ஊழியம் மிகவும் வளர்ச்சியில் இருப்பதை பதிவு செய்தார். மண்டபசாலை கிராம பகுதியாகயிருப்பதால் அருப்புக்கோட்டையை மையமாக வைத்து ஊழியம் செய்தார். 1846 முதல் 1851 வரை மண்டபசாலை, அருப்புக்கோட்டை மற்றும் அதன் சுற்றியுள்ள கிராமங்கள், கமுதி, அபிராமம், சாயல்குடி, செவல்பட்டி, கரிசல்குளம், ஆலடிபட்டி மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் அருள்திரு.ஹோரேஸ் S.டெய்லர் மிஷனரியால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள் ஆகும். இவருடைய ஊழியத்தில் சில சிக்கல் வந்தது. மல்லாங்கிணர் உபதேசியர் விலகியது, அவர்க்கு பதிலாக வந்த ஊழியரும் விலகியது டெய்லருக்கு மன வருத்தத்தைக்கொடுத்தது.

**பிறப்பு மற்றும் குழந்தை பருவம்:**

அருள்திரு. ஜேம்ஸ் ஹேரிக் மிஷனெரி 1814-ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தார். தன்னுடைய பெற்றோர் அரவணைப்பில் வளர்க்கப்பட்டார். வேதத்திலும், ஜெபத்திலும் பெற்றோர்கள் மூலம் உற்சாகமூட்டப்பட்டு வளர்ச்சியடைந்தார். பெற்றோர்களுடன் ஆலயம் செல்வதில் இளமையிலே சாட்சியாக விளங்கியவர். 1841-ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டில் வில்லியம்ஸ் கல்லூரியில் தனது பட்டப்படிப்பை முடித்தார். தன்னுடைய வாலிப பருவத்தில் கடவுளுடைய மிஷனரி பணிக்கென்று தன்னை அர்ப்பணித்தார். 1845-ஆம் ஆண்டு தன்னுடைய இறையியல் கல்வியை முடித்தார். குருவாக அபிஷேகம் செய்யப்பட்டு இந்தியாவிற்கு மிஷனரியாக அனுப்பப்பட்டார்.

**நற்செய்தி பணி**

1845- ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மிஷனெரி பணி செய்வதற்காக இந்தியாவிற்கு 1846- ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமெரிக்கன் மதுரை மிஷன் மிஷனரியாகச் சேர்ந்தார். இவர் இந்தியாவில் மிஷனரியாக இருந்த காலமெல்லாம் திருமங்கலத்தை மையமாக வைத்து நடைபெற்ற மிஷனெரி பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டார். இவருடைய மிஷனெரி பணி ஆரம்பித்த காலத்தில் மொத்தம் 4 கிராமங்களில் ஐம்பது குடும்பங்கள் இருந்தன. ஆனால் இவர் 1883-ஆம் ஆண்டு மிஷனெரி பணியிலிருந்து ஓய்வு பெற்ற அமெரிக்க செல்லும்பொழுது 57 கிராமங்களில் 1300 ஆத்துமாக்கள் கொண்டதாக இவருடைய மிஷனெரி பணி வளர்ந்திருந்தது.

**மிஷனெரியின் குணங்கள் :**

அருள்திரு. ஜேம்ஸ் ஹேரிக் மிஷனெரி கூர்ந்து கவனிக்கும் தன்மையுடையவர், ஜெப வீரர், கிறிஸ்துவுக்காக உண்மையாக பணியாற்ற வேண்டும் என்ற எண்ணமுடையவர், முன்மாதிரியான வாழ்க்கையில் தன்னை நேர்மையாக காட்டக்கூடியவர், அனைவரோடும் தோழமையுடன் பேசக்கூடியவர், எளிமையாக தன்னுடைய பேச்சிலும், செயலிலும் சாட்சியா இருக்கக்கூடியவர், தன்னுடைய வாழ்வே இயேசுவின் சாட்சியாக வாழ்ந்துக்காட்டியவர். இது போன்ற குணநலன்களால் நிறைந்தவராக காணப்பட்டார். ஒரு நல்ல நண்பராக செயலாற்றும் ஆர்வமுடைய இவருடைய குணம் ஒவ்வொருவரையும் தன் பக்கமாக இழுக்கும்படி செய்தது. இவர் பள்ளிக்குழந்தைகளுடன் பாடல் பாடுவதில், தூரமான கிராமங்களுக்கும் தன் குதிரையில் சென்ற நற்செய்தி பணி ஆற்றுவதிலும் ஈடுபட்டார்.

**நற்செய்தி பணி செய்தல்:**

அருள்திரு.ஜேம்ஸ் ஹேரிக் மிஷனெரி ஒவ்வொரு கிராமங்களுக்கு குதிரையில் செல்லும் பொழுது வழியில் நடந்து செல்கிற மக்களைக் கண்டவுடன் தன் குதிரையை விட்டு இறங்கிச்சென்று அவர்களிடம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி நற்செய்தியாக அறிவிப்பார். இவருடைய நற்செய்தி பணி 37 வருடங்களாக திருமங்கலம் மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராம பகுதிகளில் நற்செய்திப் பணி செய்தபடியால், இவரைத் தெரியாதவர்கள் யாரும் இந்தப் பகுதியில் இருந்ததில்லை.

இவர் தன்னுடன் பணி செய்த சுதேச ஊழியர்கள், உதவியாளர்களுடன் பல கிராமங்களில் கூடாரத்தில் தங்கியிருந்து நற்செய்திப்பணி செய்யும் பொழுது, மிக எளிமையாக வாழ்க்கை நடத்தினார். அதிகாலையில் இருட்டோட எழுந்திருந்து ஜெபித்து தங்கள் நற்செய்திப் பணியை ஆரம்பித்தார்கள். மதியவேளையில் எல்லோரும் கூடி தங்களுடைய பணியைப் பகிர்ந்து கொண்டு, வேதத்தை ஆராய்ச்சி செய்வார்கள். தொடர்ந்து மாலையில் தங்கள் நற்செய்திப் பணி செய்வார்கள். இந்த நேரங்களில் இவருடைய வழி நடத்துதல், ஒரு நண்பராக செயலாற்றும், ஆர்வம் எல்லோரையும் கவர்ந்தது.

**மல்லாங்கிணர் திருச்சபையின் ஆரம்ப காலம்:**

1849 ஆம் ஆண்டு அருள்திரு. ஜேம்ஸ் ஹேரிக் திருமங்கலத்திலிருந்து தன்னுடைய மிஷனரிப் பணியை மல்லாங்கிணறு, சித்து மூன்றைப்பு ஆகிய பகுதியில் மேற்கொண்டார். அப்பொழுது மல்லாங்கிணறு என்ற கிராமத்தில், அங்கு இருக்கும் தலைவரை சந்தித்து நற்செய்தியை அருள்திரு. ஜேம்ஸ் ஹேரிக் அவர்கள் அறிவித்தார். அருள்திரு. ஜேம்ஸ் ஹேரிக் அவர்கள் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு 'ஞானமுத்து' என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றார். அதன்பின்பு ஒவ்வொருவராக அந்த கிராமத்தில் கிறிஸ்தவராக மாற தொடங்கினார்கள். 1854 ஆம் ஆண்டில் 16 கிறிஸ்தவ குடும்பங்கள் இருந்தார்கள். 1855 ஆம் ஆண்டு மார்ச் 20 ம் தேதி மல்லாங்கிணர் ஒரு தலைமையிடமாகக் கொண்டு திரு. வின்பிரட் உபதேசியராக நியமித்து ஊழியப் பணிகளை கவனித்து வந்தார். அதன் சுற்றியுள்ள கிராமங்களிலும் நற்செய்திப்பணியை செய்தார். பின் நாட்களில் திரு.வின்பிரட் என்பரை குருவாக அபிஷேகம் செய்து மல்லாங்கிணர் திருச்சபைக்கு ஆயராக நியமித்தார். இந்த திருச்சபைதான் மதுரை அமெரிக்க மிஷன் பணி செய்த பகுதிகளில் சிறந்த திருச்சபையாக காணப்பட்டது.

**கடைசி கால பணியும், அவருடைய மரணமும்**

1883 - ஆம் ஆண்டு இவர் தன்னுடைய மிஷனெரிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்பு தன்னுடைய சொந்த நாடான அமெரிக்காவிற்கு சென்றார். தன்னுடைய வயது முதிர்வினாலும், சுகவீனத்தினாலும் 1891- ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி அமெரிக்க நாட்டிலுள்ள பிராட்டில் புரூக் என்ற இடத்தில் 77 ஆம் வயதில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அருள்திரு. ஜேம்ஸ் ஹேரிக் மிஷனெரி பணியை தொடர்ந்து திருச்சபையில் இந்திய மிஷனெரிகள் தொடர்ந்தார்கள்.

அருள்திரு. ஹோரேஸ் S. டெய்லர் மற்றும் அருள்திரு. ஜேம்ஸ் ஹேரிக் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து, கர்த்தருடைய நற்செய்திப்பணியை வெறும் வார்த்தையால் மட்டும் அல்ல தன்னுடைய வாழ்வின் மூலமாகவும், அவர் நடந்து கொள்ளும் நடவடிக்கையின் மூலமாகவும் கடவுளுக்கும், திருச்சபை மக்களுக்கும், பிற நம்பிக்கையுள்ளவர்களுக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். அவருடைய மூச்சு இன்னும் திருச்சபைகளில் உயிருடன் இருந்துக்கொண்டுதான் இருக்கின்றது.

**இன்றைய நாட்களில் மிஷனெரி பணிகள் தொய்ந்துபோய் காணப்படுகிறது. மிஷனெரி பணி செய்வதற்கும், நற்செய்தி பணியை செய்வதற்கும் கர்த்தர் உங்களை அழைக்கின்றார்.** தெற்கு வட்டகை மன்றம், அருப்புக்கோட்டை பகுதிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த அருள்திரு. ஹோரேஸ் S.டெய்லர் மற்றும் அருள்திரு. ஜேம்ஸ் ஹேரிக் மிஷனெரிகளைப் போல் நம்முடைய வாழ்வையும், நம்முடைய தாலந்துகளையும் அர்ப்பணிக்க வேண்டும் என்று கடவுள் நம்மிடத்தில் எதிர்பார்க்கின்றார்.



# சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்

சுஜித்

மாலை மயங்கும் வேளை. வண்டிக்காரன் மாடுகளை வண்டியில் பூட்டினான். குதிரைக்காரன் வண்டிக்குப் பின்னால் குதிரையை நடத்திவர ஆயத்தமானான். பகலின்[1] கொடிய உஷ்ணம் ஒருவாறு தணிந்தது. வேப்பலோடைக் கிராமத்தில் ஆராதனையை முடித்துவிட்டுச் சபைப் பிரமுகர் சிலருடன் பேசிக்கொண்டே வந்து, கோர்ண்ஸ் ஐயர் வண்டியில் ஏறவே, வண்டியும் புறப்பட்டது. **வைப்பாறு** கிராமத்தில் இராத்தங்குவது நோக்கம்.

சுமார் ஒரு மைல் போயிருக்கும். திடீரென்று அந்த (ஏப்ரல் 1856) இரவில் மேகங்கள் திரண்டன. நட்சத்திரங்கள் மறைந்தன; பளிச்பளிச்சென்ற பயங்கர மின்னல்கள்; காது செவிடுபடும் இடியோசைகள்; வானத்தின் மதகுகள் திறந்துகொண்டதுபோலப் பெருமழை; காரிருள்; மாடுகளின் மிரட்சி; கரிசல் மண்ணில் சக்கரங்கள் சிக்கிக்கொள்ள, அவை வண்டியை இழுப்பதில் அடைந்த சிரமம். வண்டிக்காரனும் குதிரைக்காரனும் பிடித்துக் கொண்டிருந்த தாழங்குடைகளால், மழைக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. வண்டிக்குள்ளும் மழைத்தூறல்; ஐயரும் நன்றாய் நனைந்துவிட்டார்! வண்டி சிறுகச்சிறுக முன்னேறியது. ஏதேனும் கிராமங்கள் பக்கத்திலிருந்தால் அங்கு போகலாமெனில், பாதையும் தெரியவில்லை. வெள்ளமாயோடின மழைத்தண்ணீர் அதை அழித்துவிட்டது. நிமிடத்துக்கொருமுறை தோன்றும் மின்னல் வெளிச்சத்தில் ஆங்காங்கே புதர்களும் பனைமரங்களும் தெரிந்தன வேயன்றிக் கிராமங்களைக் காணோம். மழையும் விட்டபாடில்லை!

“வண்டிக்காரா, உனக்கு முன்னால் தூரத்தில் ஒரு விளக்கு வெளிச்சம் தெரியவில்லையா?” “ஆம், ஐயா. ஆனால் அதுவும் மறைந்துவிட்டதே!‘ “பரவாயில்லை; அதற்கு நேராகப் போ. ஏதாவது கிராமமிருக்கும்”. “ஆகட்டும் ஐயா‘

வண்டி ஊர்ந்து செல்லவாரம்பித்தது. களிமண் சேற்றில் மாடுகளால் அதை இழுக்கமுடியவில்லை. வண்டிக்காரன் கீழே இறங்க, அவற்றுக்கு ஒத்தாசையாக, அவனொரு புறமும் குதிரைக்கார னொருபுறமுமாகச் சக்கரங்களை நகர்த்த முயன்று வண்டியை ஓட்டலாயினர். மழையோ நின்றபாடில்லை; இடியும் மின்னலும் ஓய்ந்தபாடுமில்லை; நேரமுமாகிக்கொண்டிருந்தது.

ஒருவாறு கிராமத்துக்குள் வந்தாயிற்று. ஆனாலும் மழைக்கு ஒதுங்க இடமில்லை. நடுத்தெருவில், அந்த நள்ளிரவில், நனைந்த ஆடைகளுடன்நடுங்கிச்கொண்டு, வண்டிக்குள்ளிருந்துசெய்வதெனத் தெரியாதிருந்தார் கோர்ண்ஸ் ஐயர். வண்டிக்கு வெளியில் மாடுகளும் குதிரையும் வேலையாளிருவரும் குளிரில் ஆடினவர்களாய் மழையில் குளித்துக் கொண்டிருந்தார்கள். மழை சோவென்று பெய்துகொண்டிருக்க, தெருக்களெல்லாம் வெள்ளப்பெருக்கு. மழை எப்போது நிற்கப்போகிறது? அறிகுறியெதுவுமில்லை. இக்கிராமத்தில் கிறிஸ்தவர்களொருவருமில்லை; தெரிந்தவர்களும் கிடையாது; ஐயர் கண்களை மூடித் தியானத்திலாழ்ந்தார்.

சற்று தள்ளி ஒரு பெரிய வீடு. நாட்டாண்மைக்காரருடையது. அங்கு சில ஆட்கள் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள். பல நிமிடங்களுக்குப் பின், அவ்வீட்டின் முன்வாசல் திறந்தது. மழையோ பெருமிரைச்சலுடன் பெய்துகொண்டிருந்தது.

‘எசமான், எசமான்!”. வண்டிக்கு வெளியிலிருந்து யாரோ தன்னை விளிப்பதறிந்து, ஐயர் கண்களைத் திறந்து உற்று உற்றுப்

1. 1856 ஏப்ரல் 12

பார்த்தார்; ஒரு உருவம் தெரிந்தது. 'யார்?" "எசமான், இறங்குங்க, எங்க வீட்டுக்கு வாங்க; நனைஞ்சிக் கிட்டிருக்கீங்களே"; 'சரி, வருகிறேன். நீ யார்?" 'சொல்றேன். , முதல்ல நீங்க வாங்க". வண்டிக்காரன் நுகக்காலை அழுத்திப் பிடித்துக்கொள்ள, ஐயர் இறங்கி, வந்தவன் பின்னால் போனார். வண்டிக்காரன் மாடுகளை அவிழ்த்து சக்கரத்தில் கட்டினான். குதிரைக்காரன் குதிரையுடன் ஐயருக்குப் பின் சென்றான்.

அப்பெரிய வீட்டினுள் நுழைந்ததும், அங்கிருந்த முதியவர் எழுந்துநின்று, கைகூப்பி மரியாதை தெரிவித்து, ஐயரை அன்புடன் அழைத்து, 'ஐயா, ரொம்ப நனைஞ்சி போனீங்களே, அந்த பெஞ்சில் உள்க்காருங்க. இது எம்மவந்தான். யாரோ தொரை வந்திருக்காருண்ணான். நான் நம்பல்லை. பிறவுதான் தெரிஞ்சிது வெள்ளக்காரத் தொரைன்னு. உங்களுக்குக் குடுக்க நம்ப வீட்டில் ஒண்ணுமில்ல. பாலுதானிருக்கு', என்று மழமழவென்று பேசி, ஒரு குவளையில் சூடான பசும்பாலைக் கொடுத்தார். மழை இன்னும் நிற்கவில்லை. அங்கிருந்த தன் ஆட்களிலொருவனைப் பார்த்து, அப்பெரியவர், 'டேய், அந்த வண்டிக்காரச் சாணானுக்கும் குருதக்காரச் சாம்பானுக்கும், பின்னால் கூட்டிட்டுப் போய், அம்மாட்டச் சொல்லிக், கஞ்சியூத்து. பசியாயிருப்பானுக", என்று கட்டளை பிறப்பித்து, இன்னொருவனைப் பார்த்து 'மாடுவளத் தொழுவத்தில் கட்டி ரெண்டு வைக்கயிழுத்துப் போடு; குருதயக் கொண்டுபோய் தாவாரத்தில கட்டு" என்றார்.

பாலை அருந்திப் பசியாறிக், களைப்பு நீங்கின கோர்ண்ஸ் ஐயர் உடை மாற்றிக்கொண்டார். முதியவர், 'ரொம்ப நேரமாகத் தொரைய வண்டிலேயே நனஞ்சிக்கிட்டிருக்க விட்டுப்பிட்டேன் தொரை கோவிச்சுக்கிடக் கூடாது. டேய், மாட்டக் கட்டிட்டியா? வய்க்கல இழுத்துப்போட்டியா. அவனுவளுக்கு கஞ்சி யூத்தியாச்சா?" என்று தன் ஊழியரை வினவிக்கொண்டு, மறுபடியும் ஐயரிடம் பேசுபவரானார். இருவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

பெரியவர், "யாரோ ஒரு வேதக்கார உபதேசி வண்டியிலிருக்கான்ணி ஊர்க்காரங்க சொன்னாங்க. மழையில நனைங்சிக்கிட்டிருக்காரு , வீட்டுக்குள்ளார கூட்டியாரட்டு மாண்ணு கேட்டாங்க. நானுமசியல்ல. அந்தச் சாணார உபதேசிதான்[2] வந்திருக்காம்போலுக்குண்ணு வேண்டாண்ணுப்புட்டேன்; மழை ரொம்பப் பேஞ்சிக்கிட்டிருக் கேண்ணாங்க, அவஞ்சாவட்டும், என் வீட்டுக்குள்ளார அவன் வரப்புடாதுண்ணு சொல்லிட்டேன்" என்றார். ஐயர் 'ஏன் அந்த உபதேசியார் அப்படிச் சாகட்டுமென்று நீங்கள் எண்ணினீர்கள்? அவர் என்ன தப்புச் செய்தார்?" என்க, பெரியவர், "**ஓ, அதக் கேக்கீங்களா? அந்தச் சாணார உபதேசிகள்ள எவனாச்சும் ஒரு வீட்டுக்குள்ள வந்தான்னாக்கி, பத்தே வினாடிக்குள்ளார வேதத்தைப் போதிக்க ஆரம்பிச்சிருவான். அதுனாலதான் அவனுவள்ள எவனையும் நம்ப வீட்டுக்குள்ள விட்ரதில்லண்ணு தீர்மானிச்சிப் புட்டேன்**", என்றார்.

ஐயருக்கு ஒருபுறம் மகிழ்ச்சி, இன்னொருபுறம் மனவேதனை! தன் மேற்பார்வையில் ஊழியம் செய்துவந்த உபதேசிமார் சுவிசேஷச் சத்தியத்தை அதை அறியாதவர்களுக்குப் போதிப்பதில் ஆர்வம் மிக்கோராயிருக்கிறார்கள் ளென்பதற்கு இம்முதியவரின் கூற்று சான்று கூறுகிற சென்று மகிழ்ச்சி. நல் மனங்கொண்ட இந்த நல்லவர் நற்செய்தியைப் புறக்கணிப்பதில் இத்துணை தீவிரம் காட்டுகிறாரே என்று மனவேதனை.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே, பெரியவர் குறிப்பிட்ட அந்த உபதேசிமாரின் குலத்தைச் சேர்ந்தவனான வண்டிக்காரன், பின்கட்டில் சாப்பாடு முடித்துக்கொண்டு, முன்புறவாசல் வழியாக வீட்டிற்குள் வந்து, அங்கு திண்ணையிலுட்கார்ந்திருந்த பண்ணையாட்களுடன் அமர்ந்தான். அமர்ந்து அரை நிமிஷத்துக்குள், தன்னைச் சுற்றியிருந்த அப்பண்ணையாட்களிடம், 'நீங்கள்ளாம் வேதத்துக்கு வாங்க. இயேசுநாதர் தான் உண்மையான கடவுளு. நம்மெல்லாருக்காவவும் அவரு மனுசனாகி இந்தப் பூமிக்கு வந்தாரு. அவர நம்புங்க. நம்ம பாவத்தயெல்லாம் அவரு மன்னிச்சி, நமக்கு நல்ல கதி கொடுப்பாரு. என்னைப் பாருங்க. நான் படிச்சவனில்ல, ஆனா இயேசு சாமியை நம்புறேன். அவரு எனக்கு என்ன என்ன நன்மெல்லாஞ் செஞ்சிருக்காரு தெரியுமா? முதல்ல, எம் பாவத்தெல்லாம் மன்னிச்சிப் போட்டாரு!', என்றிவ்வாறு பிரசங்கம் செய்து, சாட்சி கூற வாரம்பித்துவிட்டான்! பண்ணையாட்கள் ஆர்வத்துடனும் ஆச்சரியத்துடனும் அவனது வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.[3]

ஐயரிடம் உரையாடலிலீடுபட்டவராய், வெற்றிலை சுவைத்துக்கொண்டிருந்த பெரியவர், பேச்சுச் சத்தம் கேட்டுத், திரும்பிப் பார்த்தார். வண்டிக்காரனின் வார்த்தைகள் அவர் காதில் விழுந்ததும், அவருடைய முகத்தில் தெரிந்த கோபாவேசம்! கண்கள் நெருப்பாயின; பற்கள் நற நற வென்றன; நரைமீசை துடித்தது! ஐயர் அவரைப் பார்த்தார்; விஷயத்தைப் புரிந்து கொண்டார். எரிமலை தழல்களுக்கு முன் பேசுவாராகி, ஐயர் அப்பெரியவரிடமே வண்டிக்காரனின் உபதேசத்தைத் தொடர்ந்து விட்டார்!

இதுவரை ஐயரை ஒரு சர்க்கார் அதிகாரியென் றெண்ணியிருந்த முதியவர் இப்பொழுது அவர் யாரென்று தெரிந்துகொண்டார். வெறுப்புதான்: ஆயினும், 'ஐயா, சொல்லுங்க; கேக்கேன்", என்று கூறி, கோர்ண்ஸ் ஐயரின் பிரசங்கத்தைக் கேட்க நிமிர்ந்துட்கார்ந்தார். ஐயரும் கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்ட தெய்வ அன்பில் ஆரம்பித்து, நீண்டதோர் பிரசங்கம் செய்வாராகி அவரிடம் பேசினார். பேசினார், பேசினார். பேசிக்கொண்டேயிருந்தார். அவ்வீடு மக்களால் நிரம்பிற்று. மழையும் நின்றிருந்தபடியால் அண்டை அயல் வீடுகளில் வசித்த மக்களும் அங்கு வந்து சுவிசேஷம் கேட்டனர்.


நடு நிசி தாண்டி வெகுநேரமானபின், ஐயருக்குக் களைப்பு மேலிடவே, பெரியவர் கொடுத்த ஜமுக்காளத்தை விரித்து, உறங்கி, மறுநாள் அதிகாலையில் குருவார்ப்பட்டி நோக்கிப் பயணமானார். பெரியவர் அவருடன் பேசிக்கொண்டே நடந்து, ஊர் எல்லையில் ஐயரை வழியனுப்பிவிட்டுத் திரும்பினார்.

2.இவர் சத்தியநாதன் என்ற தேசாந்தரப் பிரசங்கியாரான உபதேசியார். புதியம்புத்தூர் வட்டார மிஷனெரியான கோர்ண்ஸ் ஐயர் சுவிசேஷ ஊழியத்திற்கென்று இப்படிச் சில உபதேசிமாரை நியமித்திருந்தார்.

3. அக்கால நெல்லைக் கிறிஸ்தவர்கள் பிறருக்குச் சுவிசேஷம் கூறுவதை ஓர் அன்புக் கடனென்று நம்பினர்.

**"உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்,"**

# விசுவாசத்தின் கிணறும் விசுவாசக் கிணறும்



தேவாலயத்தின் முன் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார் அத்தியட்சர். லூக் சிமியோன் ஐயர் அருகில் வேறொரு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். மணக்காடு சபையார் அவர்களுக்கு முன்னால், சிலர் உட்கார்ந்தும், சிலர் நின்றுகொண்டுமிருக்க, பிஷப், "நீங்கள் ஆற்றோரத்தில் குடியிருந்தீர்கள். இப்பொழுது மேடான நிலத்தில் வீடுகட்டி இங்கு குடியேறிவிட்டீர்களே. தண்ணீரில்லாமல் கஷ்டப்படுகிறீர்களல்லவா?", என்று கேட்டார். உடனே சபைத்தலைவர் விசுவாசம், 'கொஞ்சம் கூட கஷ்டமில்லை, ஐயா. என் தோட்டத்தில் நான் ஒரு கிணறு தோண்டியிருக்கிறேன். அதற்குப் பக்கத்தில் ஒரு பழைய கிணறு இருப்பதைத் தற்செயலாகக் கண்டுபிடித்தேன். பழங்கால முறைப்படி வட்டம் வட்டமாக செங்கல் சுட்டு அதன் பக்கங்களில் வைத்து அமைக்கப்பட்டிருக்கிறது" என்றார். "அப்படியா? நான் அதைப் பார்க்க வேண்டுமே", என்று சொல்லிக்கொண்டே எழுந்து புறப்பட்டுவிட்டார் சார்ஜென்ற் பிஷப்.

கண்காணியார் எழுந்து நடந்ததும், சபையார் அனைவரும் பின் சென்றார்கள். விசுவாசம் வழி காட்ட தோட்டத்துக்குள் சென்ற அத்தியட்சர், விசுவாசம் புதிதாகத் தோண்டிக் கற்களாலும் சுண்ணாம்பாலும் சுற்றுக்கட்டு அமைத்திருந்த பெரிய கிணற்றையும், தென்னைகளும் மற்றும் மரங்களும் செழித்து வளர்ந்து நின்ற அழகையும் பார்த்து மகிழ்ந்து, **"விசுவாசம் நீர் என்னிடம் சொன்ன அந்தப் பழைய கிணறு எங்கே?"**, என்று வினவினதும் அருகில் நின்ற பலர், கைகளை நீட்டி, "அதோ , அதோ", என்று இருபது அடிகளுக்கப்பாலிருந்த அந்தப் பழைய கிணற்றைக் காட்டினர். பிஷப், "அருமை மக்களே, இதை விட முக்கியமான விஷயமொன்று எனக்கு ஞாபகம் வருகிறது. அது என்ன? நீங்கள் யாராவது சொல்லுவீர்களா?", என்று கேட்டார். ஒருவரும் பதில் சொல்லவில்லை. அவர், "உள்ள வனெவனோ" என்று ஆரம்பித்ததும் அனைவரும் ஏகோபித்து, **"உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து**

**உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்,"** என்று வாக்கியத்தைச் சொல்லி முடித்தார்கள். கண்காணியாரின் உள்ளம் குளிர்ந்தது. அவர், **"ஆம், விசுவாசம் தன்னுடைய தோட்டத்திற்காக ஒரு கிணற்றைத் தோண்டிக் கட்டி, பிரயாசமெடுத்திருக்கிறார். அவருடைய பிரயாசத்துக்குப் பலனாக வேறொரு கிணறும் அவருக்குக் கிடைத்திருக்கிறது. அல்லவா?",** என்று அம்மக்களுக்கு ஒரு பாடமே கற்பித்துவிட்டார். கிராமச் சபையாருக்குப் போதனை கொடுப்பதில் சார்ஜென்ற் பிஷப் கையாட்டிய முறைகளில் அதுவுமொன்று.

பின்பு, அவர் அந்த பழைய கிணற்றண்டை போனார். வட்டமாயிருந்த அந்த கிணற்றின் குறுக்களவு மூன்று அடி தான் (ஒரு மீட்டர்). தரைமட்டத்திலிருந்து ஆறு அடிக்குக் கீழிருந்து அதன் அடிவரைக்கும் மூன்று அடி குறுக்களவுள்ள செங்கல் வட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தண்ணீர் வெகு ஆழத்திலிருந்தது. அக்கிணற்றிலிருந்து இருநூறு கெஜத் தூரத்தில் அதைப்போன்ற வேறொரு கிணறுமிருந்தது.

"இந்த இடத்தில் ஆதி காலத்தில் ஒரு கிராமம் இருந்தது என்பதற்கு இவையே போதிய சான்றுகள் என்று என் மனதில் படுகிறது. மேற்கத்திக் காற்று பலமாக வீசி மணலைப் பெருமளவு பரப்பியதால், மக்களுக்குப் பல அசௌகரியங்களுண்டாகவே அவர்கள் வேற்றிடம் சென்றிருக்க வேண்டும். கிணறுகள் மணலால் தூர்ந்து போய்விட்டன. ஆனால், அப்படி ஒரு பாரம்பரியம் ஒன்றுமில்லை. அவ்விதம் ஒரு கிராமமிருந்து வேறிடம் மாறியிருக்கலாம் என்று யாரும் நினைக்கவும் காணோம். இப்போது இங்கு குடியேறியிருக்கிற மக்கள் தாங்கள் முற்றிலும் புதிதான ஒரு குடியேற்றத்தில் வசிப்பதாகவே எண்ணிக்கொள்ளுகிறார்கள்", என்று கண்காணியார் எழுதுகிறார் (J18-6-1877).

கிணறுகளைப் பார்த்தபின் கண்காணியார் திரும்பவும் ஆலயத்துக்கு வந்து, முன்போலவே ஆசனத்தில் அமர்ந்தார். அப்போது கீழ்ப்பட்டி என்ற கிராமத்திலிருந்து வந்த பள்ளர் குலப் பெருமக்கள், ஆண்களும் பெண்களுமாக இருபதுபேர், அங்கு வந்து அத்தியட்சருக்கு மரியாதை செலுத்தி, 'பிஷப் அவர்களைச் சந்தித்ததில் தங்களுக்குண்டான மகிழ்ச்சியைத்' தெரிவித்தார்கள். அருகில் நின்றிருந்த லூக் சிமியோன் ஐயர், புதுக்கிறிஸ்தவர்களான அம்மக்களைச் சிலாகித்துப் பேசித், தான் இன்னமும் அவர்களுடைய கிராமத்திற்கு ஒரு தடவை கூடப்போனதில்லை என்றும், ஆயினும் அக்கிறிஸ்தவர்கள் ஆராதனைகளுக்கு ஒழுங்காகப் போவதுடன், ஓய்வு நாளாசரிப்பில் வெகு கண்டிப்பாயிருக்கிறார் களென்றும் சொன்னது கண்காணியாரினுள்ளத்தில் சந்தோஷம் தந்தது. அத்தியட்சர் கேட்ட பல கேள்விகளுக்கு அவர்கள் கொடுத்த பதில்களும் அவருக்கு மன நிறைவையளித்தன.

மணக்காடைச் சேர்ந்த ஒருவர் பாளையங்கோட்டைப் பள்ளியில் ஆசிரியராயிருந்தார். அச்சமயம் அங்கு வந்திருந்த அவர், பிஷப்பிடம், 'ஐயா, இந்த மக்கள் வேலை செய்யும் நிலங்களின் உரிமையாளர் ஒரு பிராமணன்.' நான் அந்த ஆளிடம், 'இவர்கள் கிறிஸ்தவர்களாகிவிட்டபடியால், ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்யமாட்டார்களே; அதினால் உங்களுக்கு நஷ்டம் உண்டாகுமே' என்றேன். அவர், 'உண்மைதான்; ஞாயிற்றுக்கிழமைகளில் இவர்களை வேலை செய்யவைக்க என்னால் முடியவில்லை. ஆனால், மற்ற நாட்களில், நானிருந்தாலும், இல்லாவிட்டாலும் நன்றாய் வேலை செய்துவிடுகிறார்கள்' என்றார், 'ஐயா', என்று கூறினார். **"இந்தச் சாட்சியத்தைவிட, இந்த ஏழை மக்களைப்பற்றிக் கொடுப்பதற்கு பெறுமதி மிகுந்த வேறு ஒரு சாட்சியம் இருக்கமுடியாது என்று கொள்ளுகிறேன்"**, என்றெழுதுகிறார் பிஷப்.

இதற்குள் ஆராதனைக்கு இரண்டாம் மணி அடித்து விட்டது. எல்லாரும் ஆலயத்துட்சென்றனர். ஆலயத்தில் ஆண்கள் பகுதி நிரம்பிவிட்டது. பெண்கள் பகுதியில் கால்வாசி இடம் காலியாயிருந்தது.[1] லூக்சிமியோன் ஐயர் ஆராதனை நடத்தி முடிக்க, கண்காணியார் பிரசங்கம் செய்ய வாரம்பித்தார்:

**அத்தி:** 'நான் இன்று பிரசங்கம் செய்யப்போவதில்லை. இன்று நான் பார்த்த சில காரியங்களில் எனக்கு ஆர்வமிருக்கிறதினால் அதையே பொருளாக வைத்து உங்களிடம் கேள்விகள் கேட்கப்போகிறேன்.

"உடனே சபையார் தங்கள் வேதாகமங்களைக் கைகளில் எடுத்து மடியில் வைத்துக்கொண்டார்கள். அந்த நாளைய மணக்காடு சபையார் வேத அறிவில் தேர்ச்சி பெற்றவர்களாயிருந்தபடியால், சார்ஜென்ற் அத்தியட்சர் அச்சபையை அதிகம் நேசித்தார்.

**அத்தியட்சர்:** விசுவாச நாடார் ஒரு கிணற்றைக் கண்டுபிடித்திருக்கிறா ரென்று உங்களெல்லாருக்கும் தெரியும். வேதபுத்தகத்தில் நாம் முதலாவது வாசிப்பது எந்தக்கிணற்றைப் பற்றி?

**சபையார் :** (ஏகமாய்) நாகோரின் கிணறு!

**சிலர் :** அங்கேதான் தன் எஜமானின் மகனுக்குப் பெண்தேடிப்போன 'எலியேசர்' ரெபேக்காளைச் சந்தித்தான்.

**அத்தி:** ஆகாரின் சரித்திரத்தில் சொல்லப்பட்டுள்ள கிணற்றைக் கடந்து வந்துவிட்டீர்களே! ஆனாலும், பரவாயில்லை; அடுத்த கிணறு எது? எங்கே சொல்லப்பட்டிருக்கிறது?

**சபை:** ராகேலை யாக்கோபு சந்தித்த துரவு!

**அத்தி:** அது நீங்கள் முன்பு சொன்ன அதே துரவுதான் என்றெண்ணுகிறேன். வேறொரு கிணறு?

**சபையாரில் ஒருவர்:** யோசேப்பை தூக்கி எறிந்து போட்டார்களே, அந்தப் பாழ்ங்கிணறு!

**அத்தி :** தாவீதின் சரித்திரத்தில் ஒரு விசேஷமான கிணறு உண்டே !

**சபையாரில் வேறு ஒருவர் :** ஒரு மனுஷனுடைய வீட்டின்முற்றத்திலிருந்த கிணற்றில் தாவீது ஒளித்துக் கொண்டானே அந்தக் கிணறு.

**ஒரு கீச்சுக் குரல் :** அது தாவீதில்லை! தாவீதுடையவேலைக்காரர் தான் அப்படி ஒளித்துக்கொண்டார்கள் அத்தியட்சருக்கு அதைக்கேட்டது அதிக சந்தோஷம்: அவர்

1.நூறாண்டுகளுக்கு முன் திருநெல்வேலி திருச்சபையில் பெண்களை விட, ஆண்கள் தாம் ஆலயத்துக்கு ஆர்வத்துடன் திரண்டு வருவதுண்டு. அவர்கள் உட்காரும் பக்கம் (எந்த ஆலயத்திற்குச் சென்றாலும்) நிறைந்திருக்கக் கண்டதாகவே மிஷனெரிமார் தங்கள் கடிதங்களில் கூறுகின்றனர். ஆனால், இன்றோ?. ஆண்களான திருச்சபை மக்களே, நம் முன்னோரின் முன்மாதிரியையும், தெய்வ பக்தியையும் தெய்வ பயத்தையும், ஆலயவாஞ்சையையும் மறவாதேயுங்கள். எந்த ஆலயத்திற்குச் சென்றாலும் இன்று நாம் காண்பதென்ன? ஆண்களின் பக்கம் முக்கால்வாசி, முக்காலே அரைக்கால்வாசி காலி.

மனநிறைவுடன் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டார்.

**அத்தி :** ரொம்ப சரி. தாவீதின் சொந்த ஊரில் ஒரு கிணறு இருந்ததல்லவா?

**சபையாரில் சிலர் :** தாவீதின் சொந்த ஊர் பெத்லெகேம்.

**அத்தி :** சரி.. அந்தக் கிணற்றைப்பற்றிய விசேஷம் ஒன்று உண்டு. யாருக்காவது ஞாபகம் இருக்கிறதா? அமைதி... ஒருவருக்கும் ஞாபகமில்லை.... ஒருவரையொருவர் பார்த்து விழிக்கிறார்கள்...உதட்டைப் பிதுக்குகிறார்கள். இவ்வளவு நேரமும் உற்சாகமாயிருந்தவர்களின் முகங்கள் குறாவிப்போயின. அசடுவழிகிறது என்பார்களே, அப்படி! பாவம்! அத்தியட்சர் காத்துக்கொண்டிருக்கிறார். சிலர் வேதபுத்தகத்தின் பக்கங்களை திருப்பித் திருப்பிப் பார்க்கிறார்கள். அந்தக் கிணறு மறைந்து கொள்கிறது!.

**அத்தி :** சரி... பரவாயில்லை...நீங்கள் மறந்து விட்டீர்கள். நான் சொல்லுகிறேன், கேளுங்கள்: தாவீதுக்கு ரொம்பக் களைப்பாயிருந்தது; சோர்ந்து போய்விட்டான். அவன் பெத்லெகேமின் ஒலிமுக வாசலிலிருக்கிற கிணற்றின் தண்ணீரின் மேல் ஆவல்கொண்டு.

சபையாருக்கு இப்பொழுது தெரிந்துவிட்டது. எல்லாருடைய கண்களும் பிரகாசித்தன; முகங்கள் மலர்ந்தன. ஆனாலும், பிஷப் பேசும்போது குறுக்கிடத் துணிவில்லை. கண்காணியாரும் அதைக் கண்டுகொண்டு, தானே அந்தச் சம்பவத்தைக் கூறினார் (II சாமு. 23 : 15-17). பின்பு,

**அத்தி :** சரி, இப்போ, தீர்க்கதரிசிகளின் காலத்துக்குவாருங்கள். ஒரு விசேஷித்த கிணற்றைப்பற்றி ஏசாயா பேசுகிறார் : என்ன பேசுகிறார்?

உபதேசியாருக்குப் பொறுக்க முடியவில்லை, சபையார் மறுபடியும் விழிக்கிறார்களே! பிஷப் தன்னைப் பற்றி என்ன நினைத்துக்கொள்வாரோ என்ற பயம் அவருக்கு. உபாத்தியாயரும் பதறுகிறார்! பள்ளிச் சிறுவர்களில் ஒருவன் கூடச் சொல்லக் காணோமே. அத்தியட்சர் என்ன நினைப்பார்! உதட்டை அசைத்து அசைத்து, அருகிலிருந்த சிறுவனிடம் ஏதோ சொல்ல முயற்சிக்கிறார். அவன் விளங்கிக்கொண்டால் தானே! அவனுக்கு ஆசிரியரின் மௌனப்பேச்சு விளங்கவில்லை. எனவே, அவர் பொறுமை இழந்து சற்று உரக்கவே சொல்லிவிட்டார்! அவனும் கேட்டான், அத்தியட்சரும் கேட்டுவிட்டார் !

**அத்தி :** சரி, வாசி .

**பையன்:** (வாசிக்கிறான்) ஏசாயா 12:3. **"நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு கொள்வீர்கள்,"**

**அத்தி :** இந்த ஊற்றுகள் எங்கேயிருக்கின்றன?

**சபை :** (ஏகமாக) இயேசு கிறிஸ்துவில்.

**அத்தி :** இந்தக் கருத்தில் அவர் தம்மைக் குறித்து எந்த இடத்தில் சொல்லியிருக்கிறார்? (இப்பொழுது சபையாருக்கு உற்சாகம் பிறந்து விட்டது. )

**சபை :** ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் என்று சொல்லியிருக்கிறார்.

**அத்தி :** ரொம்பச் சரி... சந்தோஷம்... விசுவாச நாடாருக்குத் தன் தோட்டத்தில் ஒரு கிணறு இருந்தது. ரொம்ப நாளாகத் தெரியாது. ஏனென்றால் அது மணலால் மூடப்பட்டுவிட்டது. அல்லவா? இரட்சிப்பின் கிணறு ஒருநாளும் மூடப்படாமல் எப்போதும் திறந்தேயிருக்கிறது என்பதற்கு யாராவது ஒரு வாக்கியம் சொல்லமுடியுமா?. . .

ஓகோ! கஷ்டமான கேள்வியாயிருக்கிறதே! மறுபடியும் விழிக்கிறார்கள் சபையார். சிலர் பக்கங்களை புரட்டுகிறார்கள். பையன்கள் உபாத்தியாயரைப் பார்க்கிறார்கள் உதடு அசைறதாகிவென்று! மறுபடியும் அகப்பட்டுக்கொள்ள அவருக்கு என்ன பைத்தியமா? - கம்மென்றிருக்கிறார் அவர். ஆலயத்தில் நிசப்தம்! கண்காணியார் காத்துக் கொண்டிருக்கிறார். அத்தியட்சர் அன்புள்ளங் கொண்டவர், ஆனால் கொஞ்சம் கோபக்காரர். அதனால், ஐயரவர்களும் கொஞ்சம் பயந்துகொண்டுதானிருக்கிறார்கள்! அப்பொழுது, கணீரென்று ஒலிக்கிறது ஒரு **ஆண் குரல்** அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும்நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்.

(இவ்வசனத்தைச் சொன்னவர் வேதாகமத்தைப் பாராமலே சொன்னார்). அத்தியட்சர் மகிழ்ந்துபோனார்.

**அத்தி :** ரொம்ப சரி. இப்போ புதியேற்பாட்டிலிருந்து ஒரு கிணறு வேண்டும்.

**சபை :** (ஏகமாக) இரட்சகர் சமாரிய ஸ்திரீயைச் சந்தித்தகிணறு.

**அத்தி :** அந்த ஸ்திரீ கிணற்றிலிருந்து மொண்டதண்ணீருக்கும் இரட்சகர் கொடுக்கும் தண்ணீருக்கும் உள்ளவித்தியாசம் என்ன?

**சபை :** இரட்சகர் கொடுப்பது ஜீவதண்ணீர்.

**அத்தி :** சரி, இப்போ முக்கியமான கேள்வி என்னவென்றால், இந்தச் சபையில் யார் யார் அந்த ஜீவ தண்ணீரைப் பருகியிருக்கிறீர்கள் என்பதுதான். ஜீவ தண்ணீரை அருந்தியவர்கள் அந்த அனுபவத்தைத் தங்களுக்கே வைத்துக் கொள்வார்களா?

**சபை :** இல்லை, ஐயா; மற்றவர்களுக்குச் சொல்வார்கள்.

**அத்தி :** விசுவாச நாடார் தன்னுடைய கிணற்றுத் தண்ணீரை வேறு யாரும் மொள்ளக்கூடாது என்று வேலியடைக்கவில்லையென்று கண்டு சந்தோஷப்பட்டேன். அந்தப் பழைய கிணற்றை அவர் கண்டுபிடித்த உடனே அச்செய்தி எங்கும் பரவி விட்டதல்லவா?

**சபை :** ஆம், ஐயா; உடனே ஊர் முழுதும் பரவிவிட்டது.

**அத்தி:** உலக விஷயங்களில் கவனம் செலுத்துகிற அளவுஆவிக்குரிய விஷயங்களிலும் மக்கள் கவனம் செலுத்துவார்களானால், சுவிசேஷம் எவ்வளவு விரைவாகப் பரவும்! அப்போ, ஜனங்கள் எவ்வளவு ஆர்வத்தோடு சுவிசேஷத்தைக் கேட்க ஓடிவருவார்கள்! மக்களே, மற்றவர்களுக்காக நீங்கள் செய்வது என்ன?

இந்தக் கடைசிக் கேள்வியை மிகுந்த உருக்கத்தோடு கேட்டார் பிஷப். அக்கேள்வி அம்மக்களின் இருதயத்தை ஊடுருவிச் சென்றது. அத்தியட்சர் சற்றுநேரம் அவர்களையே பார்த்துக்கொண்டு நின்றார். சபையின் மத்தியில் ஆவியானவர் அசைவாடினார்.

**அப்படியே நின்ற வண்ணம் அத்தியட்சர் ஜெபித்து சபையை ஆசீர்வதித்தார்:**

(இதை வாசித்து முடித்த வாசகர் வேதாகமத்தை எடுத்து, சபையார் உத்தரவாகச் சொன்ன வசனங்கள் இருக்கும் இடங்களைக் கண்டு பிடித்துக்கொள்ளவும்)

அத்தியாயம் 04

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர் த ஜான்சி பால்ராஜ்
jansy.emmima@gmail.com

கோவில் தேவதாசியான லட்சுமி பண்ணைவிளையில் தங்களோடு இருக்கும் தகவலை அக்கோவிலின் உரிமையாளர்களுக்கு சொல்லி விட்டார், மிஷனெரி உவாக்கர்.

**கோவிலில்....**

ஒரே ஒப்பாரி வைக்கிறா…அவள் தாய்க்காரி.

எம் பொண்ண கொன்னுட்டீளான்னு கேட்டாள் பாருங்கோ ஒரு கேள்வி…! எனக்கு அவளை அங்கேயே கொன்னுடலாமோன்னு தோணுச்சு…! கண்கள் பிதுங்க கோபத்தோடு கத்தினாள்… லட்சுமியின் வளர்ப்பு தாயாகப் பொருப்பேற்ற கோயில் தேவதாசியரில் ஒருத்தி.

லச்சுமியின் சின்னம்மா, பெரியம்மா, அத்தை, என்று அத்தனை பேர் வீட்டையும் பார்த்துட்டோம். எல்லாம் பகவான் மேல சத்தியம் செய்து வரலைங்கிறாளுக, என்ன செய்வதுன்னே ஒன்றும் ஓடல. பச்சத் தண்ணீர் கூட ஒருத்தியும் தரல.... எழவு வீடாட்டும் தெருவே கூடி அழுறா.... தலைமை தேவதாசி பங்கஜம் சலித்துக் கொண்டாள்.

இப்படி அடிக்கடி கோவிலைவிட்டு ஓடுறான்னா நாம தான் சரியில்ல; பொறுப்பில்லன்னு அர்த்தம். ஒன்பது வயசுல பொம்மநாட்டிக்கு கல்யாணம் கழிச்சுட்ரா… அவால்லாம் தன் ஆத்துக்கா ஓடுறா..? எல்லாம் ஒரே கதை தானே?.. மூத்த பூசாரியின் வார்த்தைகளில் அறிவு சாரமாரியாக ஒழுகியது.

தேவதாசியாகக் கோவிலுக்குப் பொட்டுக் கட்டப்படும் சிறுமிகளுள் சிலர் இவ்வாறு தங்கள் தாய் வீட்டைத் தேடி ஓடி விடுவதும் பிறகு கோவிலின் தேவதாசியர் அந்த வீடுகளுக்கே சென்று, தெய்வக் குற்றமாகி சந்ததியே இதனால் சபிக்கப்பட்டுவிடும், வம்சமே அழிந்து போகும், நரகமே ஏழேழு ஜென்மத்திற்கும் தொடரும் என்பன போன்ற கட்டுகதைகளை நம்பத் தகுந்த வகைகளில் எடுத்துக் கூறி மீண்டும் இழுத்து வருவர். விதவிதமான பொய்க் கதைகள் கட்டி விட்டு காரியம் சாதிப்பது அத்தேவதாசிப் பெண்களுக்குக் கைவந்தகலை.

இரண்டு நாட்களாக கோவில் முழுக்க லட்சுமியின் கதையேதான் ஓடிக்கொண்டிருந்தது.

அங்கு தேவதாசியருக்கு நடனம் கற்பிப்பதில் தலைசிறந்த நம்பியான் என்ற நட்டுவனார், அவர்களுக்குச் சேவைப்புரிவதிலும் வல்லவன். வேகவேகமாக வந்த அவன், அம்மா…நம்ம கோவில் தெருவுக்கு வெளியே பண்ணைவிளையிலிருந்து கோவில்காரியமா ஏதோ செய்தி சொல்ல இரண்டு ஆண்பிள்ளை ஆட்கள் வந்திருக்காக என்றான்.

என்னவாம்..?

உங்கள் கிட்டதான் சொல்லியாகணுமாம். நான் கேட்டுப் பார்த்தேன். மறுத்துட்டுதுங்க. ஆனால் ஏதோ முக்கிய காரியமாகத்தான் படுது எனக்கு.

அப்படியா…வா..வா..போய் கேட்டுட்டு வந்திருவோம்.

அந்தக் கோயில் தெருவிற்குள் வேறுயாரும் அனுமதியின்றி வந்துவிட முடியாது. ஆனால் அவாளுக்கு மட்டும் எந்தத் தெருவிற்குச் செல்வதிலும் எந்த அனுமதியும் தேவையில்லை.

அதை உங்கிட்டயே சொல்லிதான் தொலைச்சா என்னவாம்… சலித்துக் கொண்டே நடந்தாள் நெற்றியில் பெரிய பொட்டு வைத்திருந்த அந்த பங்கஜம்மாள்.

பூவரசம் மரத்தடியில் அவர்களின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்த மணியனும் காளியும் எதிர்கொண்டு நடந்து சென்றனர்.

பத்தடி தொலைவில் நடையை நிறுத்திக்கொண்டு,

என்ன செய்தி … பண்ணைவிளையா? என்றாள் பங்கஜம்

ஆமாங்க. மிசியம்மாவும் ஐயாவும் தான் அனுப்பி வைச்சாவ எங்களை.

யாரு அந்த வெள்ளைக்காரம்மாவா…?!

ஆமாங்க.

என்ன, என்ன…? அவசரம் பொங்க கேள்வி இரட்டித்தது.

அது…வந்துங்க… லெச்சுமி பொண்ணு மிசியம்மாகிட்ட தாங்க இருக்காவ.

என்…னது….!? சத்தம் தானாக பெரிதாகியது. நம்பியானும் திடுக்கிட்டு விழித்தான்.

மணியனும் காளியும் கைகளைக் கட்டியபடி தரையைப்பார்த்து நின்றிருந்தனர்.

சரி, நாங்க போறோமுங்க. பதிலுக்கு காத்திராமல் நடந்தனர். பங்கஜம் தன் திருவாய் மலர்ந்து லட்சுமியை அருவருப்பான வார்த்தைகளால் திட்டிக் கொண்டே வெடுக் வெடுக்கென்று கோவிலை நோக்கி நடந்தாள்.

நம்பியானும் அவள் கூடவே நடந்தும் ஓடியும் அவள் வேகத்தை சமன் செய்தபடி, அதானே...இதானே....என்று தாளந்தட்டினான்.

கோவில் தலைமை நிர்வாகிக்கு தகவலை வழியிலேயே சொல்லியனுப்பினாள் பங்கஜம்.

அவர் வருவதற்குள் நான்கைந்து தேவதாசிகளை அழைத்து ஆணையிட்டாள்... என்ன செய்வீர்களோ தெரியாது லெச்சுமி இங்க வந்தாகணும். ம்...கிளம்புங்க.

சரி ..சரி..என்றவர்கள் அவசர அவசரமாய் ஆடைகளை சரிசெய்து கொண்டு அவரவர் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைத்துக் கொண்டிருந்தனர்.

கோவில் நிர்வாகி, கோபாலன் ஐயரும் தர்மகர்த்தா கிருஷ்ணனும் இதைக் குறித்து பேசிக் கொண்டே கோவிலுக்குள் பதட்டத்தோடு நுழைந்தனர்.

வெளியில் செல்ல எதிரே வந்தவர்களைப் பார்த்த கோபாலன், எங்கே கிளம்பிட்டேள்..? என்றார்.

பண்ணைவிளைக்கு... லட்சுமி....என்று இழுத்தனர்.

இருங்க இருங்க... அதைப்பற்றி பேசிதான் முடிவுக்கு வர வேண்டும். வாங்கோ உள்ளே...செத்த நேரங்கழித்து போகலாம்.

மறுபேச்சியின்றி எல்லோரும் திரும்ப... பங்கஜம்மாள் வாங்க சுவாமி என்றாள் வணங்கியும் வணங்காமலும் நெழிந்தவாறே.

ம்... கமிட்டிய கூட்டியாகணும் உடனே.

அப்படியா....?

ஆமாம்...நீங்கல்லாம் நினைப்பதைப் போல இதுவொன்றும் லேசான காரியமில்ல. வெள்ளைக்காரங்க விசயம். சும்மா கையை வீசிட்டு போய் அவாளை இழுத்திட்டு வந்திட முடியாது.

வெபரமான நான்கைந்து பேர்களோடு நீயும் கூட போயாவணும் பங்கஜம்... என்றார் கோபாலன்.

பெரிய பூசாரி ராமமூர்த்தியின் வருகைக்காக ஆலோசனைக் கூட்டம் காத்திருக்க, கோவில் நலக்குழுவினர்களுள் இன்னும் சிலரும் வந்து சேர்ந்தனர். அந்தச் சிறிய அறையில் ஏதோ பெரிய தேச நலத்திட்டத்திற்காக ஆலோசிப்பதைபோல குழப்பத்தோடு அமர்ந்திருந்தனர்.

தர்மகர்த்தா கிருஷ்ணன், பூசாரி கோவில் வாசலில் வருவது தெரியவும் பேசத் தயாராகி எழுந்து நின்றார். அதோ வந்துட்டார்... இனி பேசுங்கோ.

இது ஒன்றும் புதிய விடயமில்ல நமக்கு. கூட ரெண்டுபேர் போங்கோ. அழைச்சிட்டு வாங்கோ.. இதுக்கு நாங்கள்ளாம் எதுக்கு பங்கஜம்மா?

சரிதான். நாங்க போகிறோம்ன்னுதான் சொல்றோம்.

இல்லையில்லை... நீங்க இதிலுள்ள அவசரம் புரியாமல் பேசுறீங்கோ. நாட்டில் குழந்தைகளை நாம இப்படி தேவதாசிகளாக தத்தெடுப்பதற்கு படித்தவாள்கிட்ட ஆங்காங்கே எதிர்ப்பு கிளம்பிட்டுதான் இருக்கு. அத்தோடு நில்லாமல் சேலம் விஜயராகவாச்சாரியார் 1892 லேயே தேவதாசிமுறையை முழுசா ஒழிக்கணுமுன்னு மான்டேக் சுப்ரீம் கவுன்சிலில் பேசியதிலிருந்தே கூடுதல் எதிர்ப்புதான்.

அது யாரு, விஜயராகவாச்சாரி? எனக்கே தெரியாது.- இது பூசாரி.

தெரிந்து கொள்ளும். இப்போ ரொம்ப முக்கியம் இதெல்லாம். அவாள் தான் 1895- ல் சென்னை மாநில கவுன்சில் மெம்பர். 1882- லிருந்து சேலம் மாநகர உறுப்பினராகவும் இருந்தார். அப்போதிலிருந்தே எதிர்ப்புகள் பலக்கத் தொடங்கிட்டுது.

இதெல்லாம் நம்மவாளுக்கு தெரியாமலிருக்கலாம். ஆனா பண்ணைவிளை கிறிஸ்தவ மிஷனெரிகளுக்கு அத்துபடி.

ஆமா.. ஆமா பாளையங்கோட்டை சி எம் எஸ் மண்டல தலைவரா இருந்தப்பவே அந்த உவாக்கர் ரொம்ப கராரான ஆளா நடந்துகிட்டார்ன்னு கேள்விப்பட்டிருக்கேன். யாரு எவருன்னுல்லாம் தயவு தாட்சணியமே பார்க்காம, குடிக்கிறவன், பலதார மணம் புரிந்தவன், மோசம் போக்குகிறவன் என்று... கிறிஸ்தவத்திற்கு மாறாக நடந்தவர்களையெல்லாம் சபை உறுப்பினர் பட்டியல்ல இருந்தே நீக்கினவராம். அவரால் மக்கள் பெரிய குழப்பத்தையே சந்திச்சி ஸ்தம்பித்து போனாங்கன்னு அங்கிருந்து வந்த என் மைத்துனன், உவாக்கர் பண்ணைவிளைக்கு வந்த தொடக்கத்தில் அவரைப்பற்றி சொன்னான் என்றான். கமிட்டி மெம்பர்களில் அதிகம் படித்தவனான கண்ணன். அவன் இப்படித் தன் நாட்டு நடப்பு அறிவை நிரூபித்து விட்டு அமர்ந்தான்.

அந்த வெள்ளக்காரி திடீர்ன்னு கூட வந்து ஒட்டிக்கிட்டாளே... எங்கிருந்து வந்தவள்?- இது தேவதாசி விஜயா.

அவளும் மிஷனெரியா மதப்பிரச்சாரம் பண்ண வந்தவள் தான். அயர்லாந்து தேசத்திலிருந்து நேரே பெங்களூருக்கு வந்து பயிற்சிக்காக அங்கு தங்கியிருந்தவள். உவாக்கர் தமிழ் மொழியை நன்னா கற்றுத் தேர்ந்தவர். தமிழ் எழுத்தும், பேச்சும் அவருக்கு மிகச் சிறப்பாக வரும். அவர் பேசினா நாமளே மெய் மறந்து செவியைக் கொடுத்திட வேண்டியது தான். அதனால் அவர்கிட்ட தமிழ் கற்க வந்தவள். வந்து இங்கயே தங்கிட்டா.

சோசியல் ஒர்க் செய்றதா சொல்லிக்கிட்டு நம்ம கலாச்சாரத்தை மாற்ற பார்க்கிறா. விடப்புடாது ஒய் அந்த மிசியை...! -இது அந்தக் கூட்டத்திலிருந்த சீனிவாசன்.

செத்த நீர் சும்மாயிரும், இதெல்லாம் பிறகு பார்த்துக்கலாம். அவசரப்படக்கூடாது. இப்போதைக்கு நம்ம வழி சீராகணும். அந்த லட்சுமிய சுமூகமா அழைச்சிட்டு வர பார்க்கணும்.

அதற்கு ஒரே வழி லட்சுமியே மனமுவந்து நம்மோடு வர வைக்கும் அளவு அவள்கிட்ட நுணுக்கமா, அன்பா பேசணும். மறுத்துப் பேச விடப்படாது. அது உங்களாட்ட தான் இருக்கு.

தேவதாசியர் மேலும் கீழுமாக தலையை வேகமாக ஆட்டினர்.

கமிட்டி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பங்கிற்கு ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்க... தலைமை நிர்வாகி கோபாலன் மட்டும் ஆழ்ந்த யோசனையில் அசையாமல் இருந்தார்.

சரி சரி... எல்லாம் பகவான் பார்த்துக்குவார். நீங்க ஒரு ஐந்துபேர் போங்கோ கூட நம்பியானையும் கூட்டிக்கிட்டு போங்கன்னு பங்கஜத்தைப் பார்த்து கூறிவிட்டு எழுந்தார். கூடவே எல்லோரும் எழுந்தனர்.

எவ்வளவு கவனமா விஷயத்தைக் கையாள வேண்டுமோ அந்த அளவு கவனமாக இருக்க வேண்டும். என்றபடியே பதிலுக்கு

காத்திராமல் பூசாரியை நோக்கிச் சென்றார்…கோபாலன்.

இருவரும் தனியாக கோவிலின் வெளிவாசல்வரை பேசிக்கொண்டே சென்றனர். கோபாலன் ஏதேதோ பேச பூசாரியின் தலைமட்டும் மேலும் கீழும் வலமும் இடமுமாக ஆடியது குடுமியோடு. வாசல்வரவும் சில நிமிடங்கள் நின்று பேசிவிட்டு பிரிந்து சென்றனர். மொத்தத்தில் மிகவும் சிக்கலான பிரச்சனையிது என்பதை மட்டும் அனைவரும் அப்போதுதான் உணர்ந்தனர். அந்தி சாயும்முன் பண்ணைவிளைக்கு வந்து சேர்ந்தனர்.

வகுத்துக் கொண்ட திட்டத்தின்படி, ஊருக்கு வெளியில் தேவதாசியர் நின்று கொண்டனர். நம்பியான் மட்டும் வேதக் கோயில்வரை சென்று கோயில் குட்டியாரிடம் வந்திருப்பதை கூறினான். அவர் விசயத்தை உவாக்கருக்குத் தெரிவிக்க காத்திருந்த அனைவரும் பரபரப்பாகினர்.

நட்டுவனார் நம்பியனை கண்டதும் உவாக்கர் பவ்யமாகக் கைக்கூப்பி வணக்கம் செலுத்தினார். அவன் குறுக்கே கட்டியிருந்த கைகளை அவிழ்க்க தளர்த்தினான். ஆனாலும் அவிழ்க்காமலே லேசாகத் தலையசைத்துக் கொண்டான்.

வீட்டிற்குள் வர விரும்பமாட்டார்கள் என்று அறிந்தே கோயில் குட்டியாரிடம், மனுவேல் வெளியில் இருக்கைகளைக் கொண்டு வந்து போடுங்கள் என்றார்.

இல்லையில்லை…அதெல்லாம் வேண்டாம். நாங்க எங்க பொண்ணை அழைச்சிட்டு போகதான் வந்தோம். என்றான் நியாயம் பொதிந்த தொனியில். அதைக் குறித்து பேசதான் உட்கார சொல்கிறேன். உவாக்கர் நாற்காலியில் அமர்ந்தவாறே கூறினார்.

என்னத்தைப் பேச நினைக்கிறீங்கோ. லட்சுமி எங்க இருக்காள்? பார்க்க வேண்டும். என்றவாறே சுற்றிப் பார்வையை அலையவிட்டு தேடினான்.

பத்திரமாக இருக்கிறாள், அதோ அந்த வீட்டில்.. சுட்டிக் காட்டுனார் ஏமியிருந்த அறையை. சுமார் முப்பதடி தொலைவில் இருந்தது அந்த அறை. அதற்குள் அங்கிருந்த அனைவரும் இருவரையும் சூழ்ந்து என்ன நடக்கப் போகிறதென்ற ஆவலில் வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினர்.

வெளியேற புறப்பட்டான் நம்பி.

நில்லுங்க தம்பி. ஏன் கிளம்பி விட்டீர்கள்?

அது வந்து… என்னோடு வந்தவர்கள் வெளியே காத்துக்கிட்டிருக்காங்கோ. அழைச்சிட்டு வந்துடுறேன்… என்றவன் விறுவிறுவென்று நடந்தான்.

ஊரார் அனைவரும் உவாக்கரின் இல்லம் நோக்கி நம்பியானை எதிர்த்துப் படையெடுத்து வருவதைப் போல் குழந்தை குட்டிகளையும் இழுத்துக்கொண்டு வந்து கொண்டிருந்தனர். நம்பியான் ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டே லேசான மிரட்சியோடு நடந்தான்.

சில நிமிடங்களில், ஒற்றையாள் போர் அங்கு தாக்குப் பிடிக்காது உடன் வாருங்கள் என்பதைப் போல தேவதாசியரிடம் ஏதேதோ கிசுகிசுத்து அழைத்துக் கொண்டு வந்தான்.

பங்கஜம்மாள் முன்னடக்க மற்றவர்களும் அவள் பின்னே நடந்து வந்தனர்.

அதற்குள் உவாக்கர் நான்கைந்து ஓலைப் பாய்களைத் தரையில் விரித்து வேடிக்கைப் பார்க்க வந்த ஊராரை நியாயம் பேச வந்த நியாயாதிபதிகளைப் போல வரிசையாக அமரச் செய்திருந்தார்.

ஓரிடத்தில் உட்கார விரும்பாத பொடிசுகள் ஆங்காங்கே புற்றீசல் போல ஓடியாடி விளையாட்டில் ஆழ்ந்தன.

வளாகத்தைச் சுற்றி சுற்றுக் கட்டாக ஒன்றோடு ஒன்று மிக நேர்த்தியாக இணைத்துக் கட்டப்பட்ட பனையோலை மட்டைகள் மேல்நோக்கி கூரிய அம்புகளைப் போல நின்று கொண்டிருந்தன. வாசலில் மட்டும் சற்று உயர்ந்த மட்டைகளால் கதவு செய்யப்பட்டு கட்டப்பட்டிருந்தது.

பங்கஜம் வந்த வேகத்தில் கதவில் கைவைத்து தள்ள, அழுத்தம் தாங்காமல் அந்தக் கதவு பொத்தென்று உள்நோக்கி மல்லாந்து விழுந்தது. உள்ளே குழுமியிருந்த அனைவரது பார்வையும் கதவை நோக்கி திரும்பியது.

பக்கத்து ஊரில் இருந்தாலும் அதுவரை தேவதாசிப் பெண்களைப் பார்த்திராத ஆண்களும் பெண்களும் இருக்கதான் செய்தார்கள். பிறந்தது முதல் வீட்டையும் தங்கள் ஊரையும் விட்டு வெளியே சென்றிறாதவர்களுக்கு இவர்களது தரிசனம் அதிசயக் காட்சி தான்.

அவர்களது ஆடை அணிந்திருந்த விதமும், ஆபரணங்களின் அழகும், வளர்த்திக்கேற்ற எடையும், ஒப்பனைக் கலையாத முகமும், தலைநிமிர்ந்து நடந்துவந்த அந்தக் காட்சியும் அமர்ந்திருந்தவர்களின் கவனத்தை கப்பென்று ஈர்த்து பார்வையை நிலைகுலைய வைத்தது.

தேவதாசிகளைப் பார்த்தால் நமக்கு நல்ல சகுனம் என்று எங்க பாட்டி ஓயாம சொல்லும் கூட்டத்திலிருந்த ஒருத்தி பக்கத்திலிருந்தவளிடம் கூறினாள். அது உவாக்கரின் காதில் தேனாய் பாய்ந்தது. நமக்கு நல்லதாக அமைந்தால் சரிதான், என்றார் அருகில் நின்ற மனைவியைப் பார்த்து சிரித்தபடியே.

வாங்கம்மா….எழுந்து கைக் கூப்பி வரவேற்றார் உவாக்கர். அவருடன் நின்று கொண்டிருந்தவர்களும் கைக் கூப்பி தலையசைத்தனர்.

பதிலுக்கு சற்று ஆவேசம் தணிந்து, முகம் சாந்தமானதை மட்டும் லேசாக உணர முடிந்தது. ஆனாலும் ஒருவரும் பதிலுக்கு வணக்கம் தெரிவிக்கவில்லை.

உட்காருங்கள். நாற்காலிகளை சுட்டிக்காட்டினார்.

இல்லை நாங்க உட்கார்ந்து பேச வரவில்லை.

சரி… லட்சுமி இங்குதான் இருக்கிறாள். அவளாக தான் எங்களிடம் அடைக்கலம் கேட்டு வந்தாள். நாங்கள் தான் உங்களிடம் ஆள் அனுப்பி தகவல் தெரிவித்தோம் என்பதை சற்று நினைவிற்கு கொண்டு வந்தால் இத்தனை வெறுப்பு எங்கள் மீது ஏற்பட வாய்ப்பிருக்காது என்றார் உவாக்கர் மிக எதார்த்தமாக.

பங்கஜம் சற்று இயல்பு நிலைக்கு வந்ததை அவள் பார்வை வெளிக்காட்டியது.

அதெல்லாம் சரிதான். இப்போது லட்சுமியை அனுப்பி வையுங்கள். நாங்கள் அழைத்துப் போக வேண்டும். என்றாள் ஒரு தேவதாசி.

பங்கஜம் லட்சுமியைத் தேடுவதை பார்த்த உவாக்கர்…

நீ போய் அழைத்துவா என்றார் தனது மனைவியை பார்த்து.

அதற்குள் லட்சுமியோடு ஏமியும் பொன்னம்மாள் உட்பட உடனிருந்த பெண்களும் அந்த அறையிலிருந்து வெளியில்

வந்தனர்.

எல்லோரும் லட்சுமி வந்தப் பக்கம் பார்க்க... லட்சுமி யாரையும் ஏறிட்டுப் பார்க்காமல் தலையைக் கவிழ்ந்து நின்று கொண்டிருந்தாள்.

அங்கு அரை நிமிட பேரமைதி நிலவியது.

லட்சுமிமா..... என்ற பங்கஜத்தின் ஓங்கிய குரல் நின்றுபோன அனைவரது சிந்தனையையும் செயல்பட வைத்தது.

லட்சுமி எந்தச் சலனமும் இன்றி அதே பாவனையில் நின்று கொண்டிருந்தாள்.

பங்கஜம் வேகமாக நடந்து லட்சுமிக்கு அருகில் செல்ல மற்ற தேவதாசிகளும் உடன் நகர்ந்தனர்.

லட்சுமிக்கு மிக அருகில் சென்று அவள் கையைப் பிடித்து, என்னம்மா ஆச்சு உனக்கு? உன்னை எங்கெல்லாம் தேடினோம் தெரியுமா? இப்ப தான் உயிரே வந்திச்சு. மூக்கை உரிஞ்சி அழும் பாவனைக்கு குரலை மாற்றினாள்.

லட்சுமி அசையாமல் நின்றாள்.

அடுத்தவள் லேசாக அவள் தோளைத் தொட்டு உலுப்பினாள். லட்சுமி...ஏன் இப்படி நிற்கிறே... என்னாச்சு உனக்கு? யாரோ என்ன மாயமோ செய்துட்டாங்க இவளுக்கு என்றவள் முந்தவணையால் வாயைப் பொத்திக் கொண்டு வராத அழுகையை வந்ததை போல் காட்டிக் கொண்டாள்.

பிறகு ஆளாளுக்கு மாறி மாறி லட்சுமியிடம் பேசினர்.

எதற்கும் பதிலில்லை லட்சுமியிடம். மோதும் பெரும்புயலை எதிர்கொள்ளும் கன்மலைபோல் அந்தச் சிறுமி நின்று கொண்டிருந்தது உவாக்கர் உட்பட அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

சரி...சரி.... அமைதி, என்றார் உவாக்கர்.

என்ன அமைதி..? எங்க கோயில் தாசியை நீங்க எப்படி அடைத்து வைக்கிறது. இது நியாயமில்லை. எங்களோடு அனுப்பி வைங்கோ... நாங்க பார்த்துக்குவோம்

எல்லாவற்றையும். என்றாள் மற்றொருத்தி.

அம்மா... ஆதரவற்ற நிலையில் எங்களிடம் வரும் யாரையும் நாங்கள் வெளியில் தள்ளுவதில்லை. எங்கள் வேதமும் அதைதான் எங்களுக்குப் போதிக்கிறது. அடைக்கலம் தேடி ஓடி வருபவனைக் காட்டிக் கொடாதிரு என்கிறது எங்கள் புனிதவேதம். நாங்களோ ஆள் அனுப்பி அந்தக் குழந்தையை உங்களுக்கு காட்டியும் கொடுத்து விட்டோம். ஆனால் இனி அவள் உங்களோடு வர விரும்பினால் மட்டும் தாராளமாக அழைத்துச் செல்லுங்கள். மற்றபடி இழுத்துச் செல்ல அனுமதிக்க மாட்டோம். என்றார் உறுதியாக.

அதுவரை தலைக் குனிந்து நின்றிருந்த லட்சுமி தலை நிமிர்ந்து உவாக்கரைப் பார்த்தாள். கண்கள் சட்டென குளமாகியிருந்தது. உதடுகள் விம்மின. மனதார அவருக்கு நன்றி செலுத்தியதை உவாக்கரோடு உடன் நின்றவர்களும் உணர்ந்தனர்.

என்னம்மா, லட்சுமி... நீ அவர்களோடு போக விரும்பினால் செல்லலாம். என்றார் உவாக்கர்.

எந்த பதிலும் இன்றி அவரைப் பாத்தாள்.

வாம்மா, போவோம்.....என்றவாறே அவள் கையைப் பிடித்தாள் பங்கஜம் கோட்டைக் கணக்கில் அன்பை பொழிந்தபடி. வர மாட்டேன். நான் என் அம்மாவோடு தான் வாழப் போகிறேன். என்றாள் சத்தமாக... ஏமியைத் திரும்பி பார்த்தபடி! அவள் வார்த்தைகளில் தீர்க்கமான உறுதி இருந்தது.

எவள் உனக்கு அம்மா? உன்னை தாலிக்கட்டி கூட்டி வந்ததிலிருந்து நாங்க தானே உனக்கு அம்மா? என்ற பங்கஜத்தின் குரலில் ஆயிரம் வாட்ஸ் நெருப்பொளி தெரித்தது.



தாயார் கேத்தரின் ஜேன், மகள் ஈவா, நார்மன், ஏமி, எர்னஸ்ட்

பங்கஜத்தின் முகம் ஏற்கனவே இருந்ததைவிட பெரிதாகி தொண்டை புடைக்க கத்தினாள். உன்னை.. என்ன செய்கிறேன் பார் என்று லட்சுமியின் அருகில் செல்ல, ஏமி குறுக்கே வந்து லட்சுமியை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

எல்லாவற்றிற்கும் நீ தான் காரணம். ஏதோ செய்து இவளை இப்படி மயக்கி விட்டாய். உன்னையும் உன் கூட்டத்தையும் என்ன செய்கிறோம் பார். இந்த பண்ணைவிளையில் இனி நீங்க இருப்பதை பார்த்து விடுகிறேன். என்று வாய்க்கு வந்த வார்த்தைகளைக் கொட்டினாள்.

யாரும் எந்த பதிலும் சொல்லவில்லை.

பங்கஜம் திடும் திடும் என்று கால்களைத் தூக்கி வைத்து ஓட்டமும் நடையுமாக வெளியேறினாள். குட்டி ராணுவம் போல் மற்றவர்களும் அதே உத்வேகத்தோடு இரண்டடி இடைவெளியில் அவளை பின் தொடர்ந்து நடந்து வெளியேறினர்.

அவர்கள் மறையும் வரை அங்கிருந்தவர்கள் கண்களை இமைத்ததாகத் தெரியவில்லை.

மணி ஏழு ஆனது. எதையும் பொருட்படுத்தாமல் கோயில் குட்டியார் மனுவேல் ஆலயத்தில் மணியடித்துக் கொண்டிருந்தார்.

ஆலயமணியோசை அனைவரது காதுகளிலும் தேனாறாய் பாய... வெற்றி மகிழ்ச்சி.... குதூகல சிரிப்பு...அங்கிருந்த எல்லோரையும் ஆக்கிரமித்துக் கொண்டது.

தொடரும் மகிழ்ச்சி...

# ‘மறுபடியும் பிறந்த பிள்ளை’


உக்கிரமன்கோட்டையில் அந்தோணி ஜேம்ஸின் என்ற குருவானவர் குருத்துவப்பணி நிறைவேற்றி வந்த நாட்களிலொருநாள் (1877), மாதத்தின் இரண்டாம் ஞாயிறன்று, காலை வேளையில் ரெட்டியார்பட்டிப் பாதையில் ஐயர் நடந்துபோய்கொண்டிருந்தார். முன்னால் ஒரு மனிதன் வந்து கொண்டிருந்தான். இரண்டு ஏர்க்காளைகள். தோழின் மேல் ஏர் நுகம், முதுகுப்புறம் துணியில் முடிந்த ஏதோ சில பொருட்கள், முகத்தில் கரிய மீசை, தலையில் முண்டா, நெற்றியில் நீறு. இவை சகிதமாய் அந்த மனிதன் சமீபித்த போது ஐயர் ஏதோ ஓர் ஆர்வம் உந்த அவன் முகத்தை உற்று நோக்கினார். ஆம், அவன் தான் அவனே தான்! ஐயமில்லை!

இரண்டே எட்டில் அவன் முன் போய் நின்றார் அந்தோணி ஐயர். அவனது கைகளைப் பற்றிக் கொண்டார். ‘மகனே!” என்றார். திடுக்கிட்ட அவன், ‘நீங்கள் யார் ஹயா?’ என்று வினவினவன், ஆளை அடையாளம் கண்டு கொண்டவனாய், “ஐயா, ஐயா, வாருங்கள். எங்கே இருக்கிறீர்கள்? அம்மா சுகம் தானா? ஐயாவுக்கு எத்தனை குழந்தைகள்? இப்போ எங்கே போகிறீர்கள்? தூரமா?” என்று ஏதேதோ கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான். ஐயரோ, பிடித்தகைகளை விடாமல், அவனது முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார். நெற்றியை நோக்கினார். தோளின் மீதிருந்தவற்றைப் பார்த்தார். கடைசியில் கண்களையே பார்த்தார். அவன் மேலும் பேசினான். ஐயாவுக்கு நேரமாகிவிட்டதல்லவா? நானும் பேசிக்கொண்டேயிருக்கிறேனே. எனக்கும் வேலையிருக்கிறது. நீங்கள் போய் வாருங்கள், ஐயா,” என்று கூறி நழுவப் பார்த்தான். ஐயரோ கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்!.

அவனைப்பற்றி அவர் கேள்விப் பட்டிருந்தார். சுரண்டை பள்ளியை விட்டு வந்தபின் விசுவாசத்தில் உறுதியாய்த் தானிருந்தானாம். ரெட்டியார்பட்டியில் அடிக்கடி ஆராதனையில் பங்கெடுத்து வந்தானாம். பெற்றோரின் எதிர்ப்பை எப்படியோ சம்மாளித்துக் கொண்டானாம். ஆனால், ஞானஸ்நானம் மட்டும் பெறவில்லையாம். பாளையங்கோட்டைக்குப் போய் உயர்ந்த படிப்புப் படிக்க விரும்பினானாம்; ஆனால் அங்கு போய்ப் படித்தால் வேதத்தில் முழுமூச்சாய் ‘இறங்கி’ விடுவான் என்று பயந்த பெற்றோர் அதற்கிணங்கவில்லையாம். பின், வாலிப வயதில் கலியாணம் செய்து, தன் பெற்றோருடன் தன் மனைவியும் சேர்ந்து கொண்டு அவனது கிறிஸ்தவ விசுவாசத்தைக் குலைத்து, நம்பிக்கையைத் தளரச்செய்து விடவே, நாளடைவில் பழைய மதத்தில் சேர்ந்துவிட்டானாம். இதையெல்லாம் ஏற்கனவே விசாரித்தறிந்திருந்த ஐயர் இத்தனை நாளும் அவனுக்காக ஜெபித்து வந்திருந்தாரே!; அவனைக் காண ஆசைப்பட்டுக்கொண்டிருந்தாரே!; கண்டு கொண்டபின் விடுவதெப்படி?

அவர் அவனோடு பேசினார்; பழைய நாட்களை நினைவுறுத்தினார்; கிறிஸ்துவில் அவனுக்கிருந்த சமாதானத்தையும் சந்தோஷத்தையும் ஞாபகப்படுத்தினார். மனந்திரும்ப அழைத்தார்; மீட்பர் அருளும் மன்னிப்பை எடுத்துக் காட்டினார். ஆனால் அவனோ முரண்டு பிடித்து தன் கைகளைத்திருக்கிக் கொண்டு “விடுங்களையா அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்” என்றான். ஐயருக்குத் துயரம் தாங்க முடியவில்லை. கண்கள் குளமாயின. அழுதே விட்டார்! அவருடைய கண்ணீர் அவனது கைகளை நனைத்தது. அவன் மறுபடியும் கைகளைத் திருகித் தன்னை விடுவித்துக்கொண்டு, “அழாதேயுங்கள், ஐயா; போங்கள் நான் வரும்போது வந்து கொள்வேன்; என்று சொல்லிக்கொண்டே நடந்துவிட்டான். ஐயரும் அழுத கண்ணும் சீந்தின மூக்குமாய்த் தன் வழியே போனார்.

அன்றிரவு, அம்மனிதனுக்கு உறக்கம் வரவில்லை. காலையில் நடந்ததை நினைத்து மனதுருகினான். காணாமற் போன ஆட்டைத் தன்னில் கண்டான், கண்ணீருகுத்தான். மனம்விட்டு அழுதான். காலையில் தன் மனைவியிடமும் பெற்றோரிடமும் தான் அன்று முதல் கிறிஸ்தவன் என்று தீர்மானத்துடன் கூறினான். ஆலயத்துக்குப் போய் அழுது ஜெபித்தான்; இரக்கம் பெற்றவனாய் வீடு திரும்பினான். மறுமாதம் இரண்டாம் ஞாயிறு. அந்தோணி ஜேம்ஸ் ஐயர் ஆலயத்தில் ஆராதனைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் பொழுது அவனுடைய ‘மறுபடியும் பிறந்த பிள்ளை’ யான அவன் அவரிடம் தன் வரலாறு கூறி அவரை ஆனந்தத் திலாழ்த்தினான்.



மன்னா செல்வகுமார்



# பாடுகள் மூலம் வெற்றி

ஒரு திருப்பணியாளராகவும், மிஷனெரி சங்கத்தின் தலைவராகவும் கௌடி தம் அரும் பொறுப்புகளை உண்மையாக நிறைவேற்றி முடித்தார், அக்காலத்தில் தமது சொந்த வாழ்க்கையில் சோதனைகளையும், துன்பங்களையும் அனுபவிக்க நேர்ந்தது. முதல் உலகப்போர் தொடங்கியவுடன் ஆரம்பக்கட்டத்திலேயே கௌடியின் மூன்று ஆண்மக்களும் படையில், பல்வேறு நிலையில் தொண்டாற்றப் பங்குபெற்றனர்.

மோனஹன் அவர்களுக்கு 1914-ஆம் ஆண்டு கௌடி எழுதிய கடிதத்தில் கௌடி இந்த பெரிய யுத்தத்தைக் குறித்ததான பயம் தன்னை எவ்வளவாக பாதித்தது என்பதை வெளிப்படுத்தினார். அவருடைய மக்களில் தன் வீட்டாரால் 'வில்' என்று செல்லப் பெயரிட்டு அழைக்கப்பட்ட வில்லியம் ஜாண் என்பவர் 1914 நவம்பரில் போரில் பங்கேற்க பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றிருந்தார். போரில் பங்கேற்ற வேளையில் ரிச்போர்ஜெவோ என்னுமிடத்தில் 1915 ஏப்ரல் மாதம் 6-ஆம் நாள் விழுப்புண் ஏற்று மரணமடைந்தார். கௌடியின் மற்றோர் ஆண்மகன் அலெக்சாண்டர் மால்கம் என்பார் - அலெக் என்பது அவரது செல்லப் பெயர். 2-வது லேயன்டர்ஸில் இயந்திரத் துப்பாக்கிக் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த இவரும் யுத்தத்தில் பங்கெடுத்தார். அவர் பிரான்ஸ் தேசம் சென்றிருந்தார். கில்மாண்ட் என்னும் இடத்திற்குத் தம் கீழ் பணி புரிந்த வீரர்களை நடத்திச்சென்றபோதே 1916-ஆம் ஆண்டு, ஆகஸ்டு 18-ஆம் நாள் வீரமரணம் அடைந்தார். அருளாளர் கௌடியின் மற்றொரு மகனான பிராங்க் லெஸ்லி என்பார் 4-வது 'டிராகன் கார்டு' என்னும் பிரிவில் சேர்ந்து போரில் கலந்து கொண்டு 1914 செப்டெம்பரில் பிரான்ஸ் நாட்டில் வேலை செய்தார்.

கௌடி அவர்களின் இரு ஆண்மக்களான 'வில்', 'அலெக்' ஆகியோரின் பிரிவு கௌடியின் உள்ளத்தை நொறுக்கியது. உண்மையாகச் சொல்லப் போனால் கௌடி மேற்கு ஆப்ரிக்காவிலிருந்து கப்பல் மூலம் (கடல்வழி) தன் தாய் நாடு திரும்பும் போதுதான் தன் மகன் வில் ஏப்ரல் 1915 இறந்த போன செய்தி கிடைக்கப்பெற்றார். அன்று இரவு முழுவதும் அவர் தூங்கவே இல்லை. மறுநாள் காலையில் எழுந்து மிகவும் அழுதார்.

அவருடைய மற்று மோர் மகன் 'அலெக்' என்பவரின் மரணத்தையும் கடவுள் அவருக்கு வெளிப்படுத்தினார். கௌடி 1916-ஆம் ஆண்டு வேனிற்கால விடுமுறையை வட இங்கிலாந்தில் கழித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் இரவு அவருடைய மகன் 'அலெக்' அவருடைய அறைக்கு வருவதைக் கண்டார் மறுநாள் லண்டனை விட்டுத் தன் வீட்டுக்குச் சென்றார் வீட்டினுள் நுழைந்தவுடன் வீட்டிலுள்ள கடிதப் பெட்டியைத் திறந்தார். அதில் அலெக் உயிருடன் இல்லை என்ற செய்தியைக் கொண்ட ஒரு தந்தியை அவர் கண்டார்;

கடவுளின் திருவசனம் மட்டுமே, கடவுளின் ஊழியர் மிகுந்த பாடுகளுக்குட்படும் பொழுது ஆறுதலாக இருக்கிறது.

'நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்: என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்' (யோவா 14:1)

'உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு; எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன்' (யோவான் 16:33),

அவருடைய இடர்நிறைந்த துயர நாட்களில் ஆண்டவரின் நம்பிக்கைக்குரிய நல்வார்த்தைகளே அவரைத் தாங்கி நடத்தியது. அதேவிதமாய் அவருடைய மனைவியும், இருமகள்களான 'நான்ஸி கேதரின்' 'ஹெலன் மாட்' என்பாரும் அவர் போன்றே இப்பெரும் இழப்பினைத் தாங்கும் ஆற்றல் அடைந்தனர். இவ்வுலகு அளிக்கக் கூடாத பெரும் சமாதானத்தை, உயிர்த்தெழுதலின் நம்பிக்கை அக்குடும்பத்தினர்க்கு அளித்தது.

ஜெபராஜ் I J

# புத்தக அறிமுகம்


# மறையவிருந்த மாணிக்கக் கற்கள்

இரண்டாம் பாகம்

ஆக்கியோன்

**பேராசிரியர்.அருள்திரு.D.A. கிறிஸ்துதாஸ்**

**B.A.,L.T.,B.D.,M.Th.**




பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் (1912-1990) அவர்கள் தென் இந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படும் பாளையங்கோட்டையில் பிறந்து, வளர்ந்தவர். பள்ளி ஆசிரியர், வேதாகமக் கல்லூரி பேராசிரியர், முதல்வர், அருட்பணியாளர் மற்றும் எழுத்தாளர் என பல துறைகளிலும் ஜொலித்தவர். திருச்சபையின் வரலாறு மற்றும் திருச்சபையின் வெற்றிக்குக் காரணமான தேவ மனிதர்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள இவர் எழுதிய நூல்கள் ஒரு திறவுகோல் என்றால் அது மிகையாகாது. எளிய மற்றும் வட்டார வழக்கு தமிழில் எவரும் புரிந்து கொள்ளும்படி ஆராய்ச்சி மற்றும் வரலாற்றுப் புத்தகங்களை எழுதுவது இறைவன் இவருக்குக் கொடுத்த வரம். அநேக புத்தகங்களை மட்டுமல்ல, அநேக கிறிஸ்தவ தலைவர்களையும் இவர் தன் திருப்பணி மூலமாக உருவாக்கி இருக்கின்றார்.

பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்கள் திருநெல்வேலி திருச்சபை வரலாறு மற்றும் திருச்சபையில் தடம் பதித்த மகத்தான தேவ மனிதர்கள் பற்றி ஏராளமான நூல்கள் எழுதி இருக்கிறார். இப்புத்தகங்கள் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளச் செய்வதுடன், நாமும் திருச்சபைக்கு நம் பங்காக என்ன செய்ய முடியும் என்ற சவாலை முன்வைப்பதாக இருக்கின்றன. **“மறையவிருந்த மாணிக்கக் கற்கள்” பாகம்** II என்னும் இந்நூல் மணலுக்குள் புதைந்து கிடக்கும் மாணிக்கக் கற்களைப் பொறுக்கி எடுத்து அணிகலமாகச் செய்தாற்போல், ஆங்காங்கு தெறியும், மறைந்தும் கிடந்த சரித்திரங்களைக் கண்டெடுத்து, சிறந்ததொரு ஆபரணமாகச் செய்து கொடுத்திருக்கின்றார். அவரால் இயற்றப்படடுள்ள இந்நூலே அச்சிறந்த அணிகலமாகும். இதனைப் பலர் பெற்று இதன் மூலமாகப் பயனடைவார்களென்பது கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் நோக்கம்.

வெளியீடு

**திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்**

## புத்தகம் கிடைக்குமிடம்

- திருநெல்வேலி திருமண்டல புத்தக நிலையம்
- பேராலய புத்தக நிலையம்(CSI), நாகர்கோவில்
- வரலாற்றுச் சங்க அலுவலகம்

Tamil Printed Book- For Private Cirulation Only

Return Requested:


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401


To


Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401